

# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 15 ★ 03.03.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com


அனைத்துலக தமிழ் ஊடக மையம்

## கால நீடிப்பு பற்றிய தமது நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக அறிவிக்குமா கூட்டமைப்பு?

கேள்வி எழுப்புகின்றது தமிழ் தேசிய அவதானிப்பு மையம்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜெனீவாவும்

கணிதன்





## ஜெனீவா - சிறீலங்கா அரசும், தமிழ் இனமும் மோதும் களம் என்பதை நாம் உணரவேண்டும்

வேல்ஸ் இல் இருந்து அருஷ்

## மார்ச் -6இல் யாழ் பல்கலைக்கழகத்தில் கருத்தமர்வு




## ஜெனீவாவில் கால அவகாசமா? சிவில் சமூகம் கருத்து

# கால நீடிப்பு பற்றிய தமது நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக அறிவிக்குமா கூட்டமைப்பு?

## கேள்வி எழுப்புகின்றது தமிழ் தேசிய அவதானிப்பு மையம்

"ஐ.நா.வில் இலங்கைக்கு மேலும் கால அவகாசம் கொடுக்கக்கூடாது என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்ததாக செய்தி வெளியாகியுள்ளது. இது அவரின் தனிப்பட்ட கருத்தா அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தா?" எனக் கேள்வி எழுப்பியிருக்கும் தமிழ் தேசிய அவதானிப்பு மையம்,'' இது கூட்டமைப்பின் நிலைப்பாடு என்றால், கூட்டமைப்பு எம்.பி.க்கள் அனைவரும் கையொப்பமிட்டு, இதனை ஒரு மகஜராக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கும், உறுப்பு நாடுகளுக்கும் உடனடியாக அனுப்பிவைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருக்கின்றது.

இலங்கைக்கு கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் உள்ள நிலையில், கால அவகாசம் கொடுகக்கூடாது என மாவை சேனாதிராஜா திடீரென அறிவித்திருக்கின்றார். யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து தமிழ் தேசிய அவதானிப்பு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும்



தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"ஜெனீவா தீர்மானம் 2015 ஆம் ஆண்டிலேயே இலங்கையின் இணை அனுசரணையுடன் கொண்டுவரப்பட்டது. இதற்கு இலங்கையும் இணை அநுசரணை வழங்கியிருந்தது. இதனை நிறைவேற்றுவதற்காகக் கொடுக்கப்பட்ட இரண்டு வருட கால அவகாசம் பின்னர் 2017 நீடிக்கப்பட்டது. இந்த நான்கு வருடகாலத்தில் தீர்மானத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட எதனையும் இலங்கை அரசாங்கம் செய்யவில்லை. செய்வதற்கான அக்கறையையும் காட்டவில்லை. காணாமல் போனோர் குறித்த பணியகம் ஒன்று மட்டுமே நீண்ட இழுபறியின் பின்னர் அமைக்கப்பட்டது. அது கூட அதிகாரங்களற்றதாகவே இருக்கின்றது. உரிய முறையில் செயற்படவும் தொடங்கவில்லை.

இந்த நான்கு வருடங்களில் செய்யாததததையா இன்னொரு இரண்டு வருட கால அவகாசத்தில் இலங்கை செய்யப்போகின்றது. கடந்த வருடங்களில் கொண்டுவரப்பட்ட பிரேரணைகள் இலங்கை அரசுக்கு நெருக்கடியைக்

தொடர்ச்சி 9ஆம் பக்கம் →

# மார்ச் 6இல் ஜெனீவாவும் ஈழத் தமிழர் மனிதவுரிமை நகர்வும் யாழ் பல்கலைக் கழகத்தில் கருத்தமர்வு

ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40 ஆவது கூட்டத் தொடரை முன்னிட்டு மார்ச் 6இல் ஜெனீவாவும் ஈழத் தமிழர் மனிதவுரிமை நகர்வும் என்ற கருத்தமர்வு யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது. ஜெனீவா கூட்டத் தொடர் தொடர்பில் தமிழ் மக்கள் சார்பில் எவ்வாறான நிலைப்பாடு எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் இந்தக் கருத்தமர்வில் ஆராயப்படும் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளதோடு இதற்கான ஏற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

கருத்தமர்வில் கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களின் பிரநிதிகள், பேராசிரியர்கள், துறைசார் நிபுணர்கள், பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளும் உரையாற்றவுள்ளனர். தொடர்ந்து அறிக்கை வாசிக்கப்பட்டு பொது அமைப்புக்களின் கையொப்பம் பெற்று வார இறுதிக்குள் கொழும்பில் உள்ள தூதரகங்களுக்கு கொண்டு சென்று கொடுப்பதற்கும், அத்துடன் இந்தத் தீர்மானத்தின் பிரதிகள் ஜெனீவாவுக்கு அனுப்பி வைப்பதற்குமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.




அத்துடன் எதிர்வரும் 16 ஆம் திகதி பல்கலைக் கழக மாணவர்களின் ஒருங்கிணைப்பில் மாபெரும் எழுச்சிப் பேரணி ஒன்றும் நடத்தப்படவுள்ளது. வடக்கு கிழக்கு பொது அமைப்புக்களை இணைத்து இந்த பேரணியை நடத்துவதென பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் இன்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இன்றைய கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

## ஜெனீவாவில் நாளை 'யுத்த சூனிய வலயம்'




ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40 ஆவது கூட்டத் தொடரில் நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு இலங்கைப் போரின் இறுதிக்கட்ட நிகழ்வுகளை வெளிப்படுத்தும் யுத்த 'சூனிய வலயம்' (NO FIRE ZONE: SRI LANKA AND THE SEARCH FOR JUSTICE TEN YEARS ON) ஆவணத் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.பிரபல பிரித்தானிய இயக்குனர் கலம் மக்ரே தயாரித்த இந்த ஆவணப்படம் காண்பிக்கப்பட்ட பின்னர், அது குறித்த கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. இலங்கையில் நீதியையும் சட்ட ஆட்சியையும் பாதுகாக்கவேண்டும் என்பதற்காகக் குரல்கொடுக்கும் மனித உரிமைவவாதிகளும், நிபுணர்களும் இதில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டுள்ள மனித உரிமைகள் காப்பகம், லண்டனைத் தளமாகக் கொண்டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட பல அமைப்புகளின் அனுசரணையுடன் நாளைய இந்த நிகழ்வு இடம்பெறுகின்றது

# சிறிலங்காவின் புதிய பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு ஆதரவாக ஐ.நா சிறப்பு நிபுணர் கருத்து




மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள், தமது நடவடிக்கைகளுக்குப் பொறுப்புக்கூறுவதை சிறிலங்கா அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்று ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் வலியுறுத்தியுள்ளார்.

தீவிரவாத முறியடிப்பின் போது, மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரத்தையும் பாதுகாத்தல் தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர், பியோனில்லா நி அலெய்ன் ஜெனிவாவில் நேற்று உரையாற்றிய போது இதனைத் தெரிவித்துள்ளார். "மோசமான மனித உரிமை சரிசனைகளுக்கு நிலையான தீர்வைக் காணும், முக்கியமான வாய்ப்பு சிறிலங்கா அரசாங்கத்துக்கு உள்ளது.

புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தை மீளாய்வு செய்து அதனை இல்லாமல் செய்யவும், புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வர சிறிலங்கா அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை பாராட்டுக்குரியது. புதிய சட்டம் உரிமைகளை நடைமுறையில் பாதுகாக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதை சிறிலங்கா அரசாங்கத்திடம் எடுத்துக் கூறியுள்ளேன்.

பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு குறித்தும் கவனத்தில் கொண்டு வந்துள்ளேன். முழுமையான சிவில் அதிகாரிகளின் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை குறித்தும், எல்லா சிறுபான்மை குழுக்களும் பிரதிநிதித்துவம் செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளேன். அத்துடன், நியாயமான, ஆய்வு செயல்முறைகளின் ஊடாக, மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள், தமது நடவடிக்கைகளுக்காக பொறுப்புக் கூற வேண்டும். எனது பணியகம் சிறிலங்கா அரசாங்கத்துடன் இணைந்து இதற்கான பணிகளை முன்னெடுக்க எதிர்பார்த்திருக்கிறது. தொழில்நுட்ப உதவிகளும் சிறிலங்காவுக்கு தொடர்ந்து வழங்கப்படும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை தொடர்பில் கொண்டு வரப்படவுள்ள தீர்மானம்- முதலாவது கலந்துரையாடல் இன்று ஜெனீவாவில்

இலங்கை தொடர்பாக கொண்டுவரப்படவுள்ள தீர்மான வரைவு குறித்து முதலாவது கலந்துரையாடல் இன்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இடம்பெறவுள்ளது. அதேபோன்று எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கை தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளதுடன் இம்முறையும் முக்கிய பல நாடுகள் இலங்கைக்கு எதிராக கடும் போக்கை கையாண்டு வருகின்றன.குறிப்பாக ஐ.நாவில் சிறப்பு அந்தஸ்துடைய சர்வதேச அரசசார்பற்ற மனித உரிமைகள் அமைப்புகள் சிறிலங்காவுக்கு எதிராக குரல் எழுப்ப உள்ளன. மறுப்புறம் சிறிலங்கா தொடர்பாக தீர்மானம் ஒன்றை இணை அனுசரணை நாடுகளுடன் இணைந்து முன்வைக்க பிரித்தானியா தீர்மானித்துள்ளது. இந்த தீர்மானம் குறித்த முறைசாராக் கலந்துரையாடலை ஜெனீவாவில் இன்று நடத்தவுள்ளது.

சிறிலங்காவின் பொறுப்புக் கூறல் மற்றும் மனித விவகார விடயங்கள் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் முக்கிய நாடுகள் இறுக்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. குறிப்பாக பிரித்தானியா, கனடா உள்ளிட்ட நாடுகள் குறிப்பிட்ட கால வரையறைக்குள் சிறிலங்கா ஆக்கப்பூர்வமான முன்னெடுப்புகளை வெளிப்படுத்தாவிடின் சர்வதேசத்தின் நேரடி தலையீட்டிற்கான பொறிமுறையினை உருவாக்கும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே சிறிலங்காவுக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் முடிவடைந்துள்ள நிலையில் உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் இலங்கை இன்னும் முழுமைப்பெறவில்லை என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐ.நா விஷேட நிபுணர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அந்த வகையில் சிறிலங்காவுக்கு மேலும் காலஅவகாசம் வழங்கும் வகையிலான தீர்மான முன்வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை பிரித்தானியா, கனடா, ஜேர்மனி , மசிடோனியா மற்றும் மொன்ரனிக்கோ ஆகிய நாடுகள் இணைந்தே இந்த தீர்மானத்தை கொண்டுவரவுள்ளனர். எதிர்வரும் 20ஆம் திகதி மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்கா தொடர்பான புதிய தீர்மானத்தை சமர்ப்பிக்கவுள்ளன.

# வெள்ளை வானுக்கும் எனக்கும் சம்மந்தமில்லை கோத்தபாய ராஜபக்ச

யுத்தக்காலத்தில் வெள்ளை வான் கலாச்சாரத்தில் நாம் ஈடுபடவில்லை யென சிறிலங்காவின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.கண்டியில் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே கோத்தபாய ராஜபக்ச இதனை குறிப்பிட்டுள்ளார். இதேவேளை யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வருவதற்கு சில நுண்ணறிவு செயற்பாடுகளையே முன்னெடுத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் எந்தவொரு செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லையென அவர் கூறியுள்ளார்.அந்தவகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, 30 வருடகாலமாக நாட்டில் இடம்பெற்றிருந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து, அனைத்து மக்களுக்கும் நிம்மதியான வாழ்க்கையை தற்போது ஏற்படுத்தி கொடுத்துள்ளாரெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



# இலக்கு நோக்கி

## பொருத்தமான தளங்களில் பயணிப்போம்

ஜெனீவாவின் உள்ளும் வெளியும் எமக்கான நீதியை அடைவதற்கான போராட்டக்களங்கள் சூடு பிடித்துள்ளன. ஒரு அரசின்றிய தேசிய இனமாக எங்களுக்கு கிடைக்கக்கூடிய மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களை ஜெனிவாவின் உள்ளே பதிவு செய்யப்பட்ட எங்களது அமைப்புக்கள் ஊடாகவும் எங்களைப் போன்றே பாதிக்கப்பட்டு நீதி கோருகின்ற மற்றைய தேசிய இன அமைப்புக்களோடு சேர்ந்தும் கூட்டியக்க முனைப்புக்கள் வேகம் பெற்றுள்ளன. ஜெனீவாவின் வெளியே இந்தக் காலத்தின் கவனத்தை முடிந்தளவு ஈர்க்கின்ற கவனயீர்ப்பு போராட்டங்கள் தாயகத்திலும் தமிழகத்திலும் புலம்பெயர் நிலங்களிலும் நிகழ்ந்தேறி வருகின்றன.

அநீதிக்குள்ளான மிக மோசமாக பாதிக்கப்பட்டு அதன் வடுக்களோடு வாழுகின்ற தொடர்ச்சியான இனக்கருவறுப்புக்கு ஆளாகிவருகின்ற எங்கள் பேரினம், தனக்கு கிடைக்கின்ற அத்தனை வாய்ப்புக்களையும் களங்களையும் உரிய முறையில் பாவித்து எமக்கான நீதியை பெற்றெடுக்க வேண்டுமென்பதே காலத் தேவையானது. இதனை ஒரு சிலரோ ஒரு சில அமைப்புக்களோ மட்டும் செய்து விட முடியாது. இலக்கில் பற்றுறுதியோடு ஒட்டு மொத்த இனத்தையும் உள்ளடக்கிய பொது வேலைத் திட்டங்களுக்கூடாகவே வரலாற்றின் வழித்தடத்தில் எமக்கான நீதி கைவசமாகும். இந்த வாய்ப்புக்களும் களங்களும் விசாலமானவை. எமது தேச விடுதலையில் பற்றுக் கொண்ட அக்கறை கொண்ட அனைவரும் தங்களுக்கு பொருத்தமான தளங்களில் களங்களில் ஒட்டுமொத்த இனத்தின் நிலைப்பாட்டில் பணி செய்ய வேண்டுமென்பதே இன்றைய தேவையாக இருக்கின்றது.

ஒரு அமைப்பு செய்கின்ற பணியை இன்னுமொரு அமைப்பு முன்னெடுக்காமலும் தங்கள் நலன் களை முன்னிறுத்தாமல் இனநலனை மட்டுமே முன்னிறுத்துபவர்களாக, தங்களுக்கிடையில் தொடர்பையும் உறவையும் பேணி, வேலைத்திட்டங்களில் குறுக்கீடுகள் மன உளைச்சல்கள் சேர்ந்து பணி செய்பவர்களிடத்தில் மனச் சோர்வையும் ஏற்படுத்தாமல் எங்களது பணிகளை முன்னெடுக்க வேண்டியது மிகவும் அவசியமானது. இந்த பொதுமையான தளத்தில் நாம் எச்சரிக்கையாகவும் பணியாற்ற வேண்டியே உள்ளது. இந்தத் தளங்களில் எதிரியால் உள்ளீடு செய்யப்பட்டவர்களும் இருப்பார்கள் என்கின்ற யதார்த்தத்தையும் நாம் புரிந்து கொண்டு அந்தக் கவனத்தோடும் பணியாற்ற வேண்டும். எங்களது மக்களுக்கான பொதுப்பணியை முன்னெடுப்பவர்கள் ஆளை ஆள் கால்தடம் போடுகின்ற வேலையை முதலில் விட்டாக வேண்டும். எங்கள் எவருடைய இருப்பை விடவும் இனத்தின் இருப்பும் விடுதலையுமே முதன்மையானது என்பதை மனங்கொள்ள வேண்டும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் மக்களுக்காக பணி செய்கின்ற பணியாளர்களும் மக்களின் எண்ணங்களையே பிரதி பலித்தாக வேண்டும். முள்ளிவாய்க்காலின் பின்னரான காலத்தில் இந்த நிலையில் கடுமையான பிறழ்வு காணப்படுகின்றது. இதனை மீளவும் சரியான நிலைப்பாட்டுக்கு கொண்டுவர வேண்டுமாக இருந்தால் அமைப்புகளிடத்தில் தொடர்பாடல்களும் கலந்தாய்வுகளும் இடம்பெற வேண்டும். எங்களுக்கிடையில் இருக்கின்ற இடைவெளியை எதிரி பயன்படுத்துவதை நாம் இனங்கண்டு தவிர்க்க வேண்டும். ஆதாரமில்லாத குற்றச்சாட்டுக்களையும் தனிநபர் விமர்சனங்களையும் நாம் கைவிட வேண்டும். நிலைப்பாடுகளையும் வேலைத்திட்டங்களையும் கண்ணியமாக விமர்சிக்கின்ற முறைமையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். எம்மினத்தை அழிப்பவர்கள் தங்களுக்கிடையில் ஆயிரம் முரண்பாடுகள் இருந்தாலும் எம் விடயத்தில் அவர்கள் ஒன்றாக நிற்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒட்டுமொத்த இனத்தின் விடுதலையை மட்டுமே கருத்தில் கொண்டவர்களாக அவரவர் தளங்களில் இனவிடுதலைக்கான உச்ச செயற்பாட்டில் ஒன்றிணைவோம்.

# ஜெனீவா கூட்டத்தொடர் தொடர்பான மாணவர் சமூகத்தின் பிரகடனம் காலத்தின் தேவை

ஆர்த்திதன்

ஒரு இனத்தின் விடுதலையில் அந்த இனத்தின் கல்விச் சமூகத்தின் பங்களிப்பு என்பது இன்றியமையாதது. தமிழர் உரிமையை வெல்லுவதில் மாணவர்களின் கடமைகள்

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் மாணவர் சமூகத்திற்கும் இடையில் பிரிக்க முடியாத பிணைப்பொன்று காணப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஒரு பள்ளி மாணவராக இருந்தபோதே ஈழ விடுதலைப் போராட்டத்தை கையில் எடுத்தவர். பள்ளி செல்ல வேண்டிய வயதில் தலைவர் பிரபாகரன் தமிழின மக்களுக்காக தன்னையொரு போராளியாக்கினார். இன ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ் மாணவர்களின் சினம்தான் தமிழீழ விடுதலைப் போராட்டம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் வித்து என மாவீரர் பொன் சிவகுமாரன் மதிக்கப்படுகிறார். இவர் ஒரு பள்ளி மாணவனாக இருந்து கொண்டே சிங்கள அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக போராடினார். அதிலும் தனி ஒருவனாக சிங்கள அரசுக்கு எதிரான நுட்பமான போராட்டங்களை முன்னெடுத்த மாவீரர் சிவகுமாரன் என்ற மாணவன் பிற்காலத்தின் அனைத்துப் போராளிகளுக்கும் ஒரு முன்னுதாரணமானவராகத் திகழ்கின்றார். இவரே ஈழ விடுதலை இலட்சியத்திற்காக முதன் முதலில் சைனைட் குப்பி அருந்தி வீரமரணம் எய்தியவர்.

கியூபாவின் விடுதலைப்போரை எடுத்துக்கொண்டால் அதன் முன்னாள் அதிபரும் விடுதலை இயக்கத்தின் தலைவருமான பிடல் கஸ்ரோ தலைமையில் 200 இற்கு மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்தே வலுவான விடுதலை இயக்கத்தைக் கட்டியமைத்திருந்தனர்.

தமிழீழ விடுதலைப் போரிலும், எமது மக்களின் சுதந்திரமான எதிர்காலத்திற்காக தியாக தீபம் திலீபன் உட்பட பெருமளவான பல்கலைக்கழக மாணவர்கள் தமது காத்திரமான பங்களிப்புக்களை வழங்கியிருந்தனர் என்பதுடன் பல உயிர்த்



தியாகங்களையும் மேற்கொண்டிருந்தனர்.

தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் மனைவி திருமதி மதிவதனி பிரபாகரனும், தமது பல்கலைக்கழ தோழிகளுடன் சிங்கள அடக்குமுறைகளுக்கு எதிராக உண்ணாநிலை என்ற அகிம்சைப்போரை 1980 களில் மேற்கொண்டவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்களிடம் காணப்பட்ட விடுதலைத் தீப்பொறி தான் விடுதலைப்போரின் ஆரம்ப கருவாக உதித்ததுடன், விடுதலைப்போரை மிகப்பெரும் விருட்சமாகவும் மாற்றியிருந்தது. அதற்கு சிறந்த உதாரணம் தியாகி சிவகுமாரன் ஆவார். இவ்வாறு பெருமளவானவர்களின் பெயர்களை நாம் இங்கு குறிப்பிடமுடியும், வடக்கு கிழக்கு பல்கலைக்கழகங்களின் மாணவர் அமைப்புக்கள் விடுதலைப்போரில் மட்டுமல்லாது, தமது இனமக்களின் இன்னல்கள் தொடர்பிலும் பெருமளவான விழிப்புணர்ச்சிப் போராட்டங்களை கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்தன.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி அண்மையில் சிங்கள தேசத்தின் எல்லைக்குள் நுழைந்த யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நடை பயணத்தையும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி பல்கலைக் கழக மாணவர்கள் வீதிகளில் இறங்கி போராடுவதையும் நாம் இங்கு குறிப்பிடலாம். 2000 ஆண்டின் முற்பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழ் மக்களின் அரசியல் பலத்தை கட்டியெழுப்புவதற்கு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட சனநாயக திட்டத்திற்கு உயிர் வடிவம் கொடுத்ததில் யாழ் பல்கலைக்கழகம் பெரும்பங்காற்றியிருந்தது.

சிறீலங்கா புலனாய்வாளர்களினதும் அவர்களோடு இயங்கிய ஒட்டுக்குழுக்களினதும், அச்சுறுத்தல்களையும் மீறி வடக்கு கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள் எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக எடுத்த முயற்சிகளை வரலாற்றால் அழித்துவிட முடியாதவை.

எனவே தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்களின் உரிமைகளுக்கான போராட்டங்களை முன்னெடுக்கவேண்டிய ஒரு மிகப்பெரும் பொறுப்பு தமிழ் மாணவ சமூகத்திடம் உள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்சனை, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துதல், கலாச்சார கலப்புக்களைத் தடுத்தல், அரசியல் கைதிகளை விடுவித்தல், அரசியல் தீர்வு தொடர்பில் அனைத்துலகத்தின் கவனத்தை பெறுதல், போரில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறல்களில் சிறீலங்கா அரசு மேற்கொள்ளும் பொய்யான செயற்பாடுகளை அம்பலப்படுத்துதல், தாயகத்திலே அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம். மக்களின் உரிமைகள் தொடர்பில்



தமிழ் தலைமைகளுக்கு அழுத்தங்களை பிரயோகித்தல். என மாணவ சமூகத்தின் முன் உள்ள கடமைகள் பல.

காலத்தின் தேவைகருதி நீதிக்காக ஏங்கும் எமது மக்களுக்காக வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றுபட்டு பணியாற்றுவது மக்கள் மத்தியில் மிகப்பெரும் நம்பிக்கையினை விதைத்துள்ளது. அதனை முன்னெடுக்கும் முயற்சிகளை தற்போது பல்கலைக்கழக மாணவ சமூகம் மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. ஜெனீவா கூட்டத்தொடர் தொடர்பான தமிழ் மக்களின் நிலைப்பாடு குறித்து எதிர்வரும்



மார்ச் 6 ஆம் நாள் மாணவ சமூகம் மாநாடு ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

இந்த மாநாட்டுக்கு தாயகத்தில் உள்ள உயர் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களும் தமது ஆதரவுகளை வழங்குவதுடன், எமது கோரிக்கைகளை ஜெனீவாவில் பங்குபற்றும் அனைத்துலக சமூக பிரதிநிதிகள் கருத்தில் எடுக்கும் நிலையையும் மாணவர் சமூகம் உருவக்கவேண்டும். போர் நிறைவடைந்ததாக சிறீலங்கா அரசு தெரிவித்து 10 ஆண்டுகள் அண்மித்துள்ள நிலையிலும், சிறீலங்கா அரசுக்கு அனைத்துலக சமூகத்தால் வழங்கப்படும் கால அவகாசம் என்பது தமிழ் மக்களின் உரிமைகளையும், அவர்களுக்கான நீதியையும் அனைத்துலக சமூகமும், பிரித்தானியாவும் நிராகரிப்பதற்கு இணையானது என நாம் உரத்துக் கூறவேண்டும். மக்களும் மாணவ சமூகமும் ஒருங்கிணைவதன் மூலம் தான் ஒரு வலுவான சக்தியாக எமது இனத்தை நாம் கட்டியமைத்துக்கொள்ள முடியும்.

# ஜெனீவாவில் கால அவகாசமா? தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக சிவில் சமூகம் கருத்து

தற்போது ஐ.நா.சபையின் மனித உரிமை ஆணையத்தின் 40வது கூட்டத் தொடர் ஜெனீவாவில் நடைபெற்றுவருகிறது. 2015 இல் தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில் இலங்கையின் ஒப்புதலுடன் கொண்டுவரப்பட்டு குறைந்தபட்ச தீர்மானத்தைக்கூட இலங்கை நடைமுறைப்படுத்தாது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஜெனீவாவில் கால அவகாசத்தை பெறுவதிலும் தமிழர் பிரதேசங்களில் கட்டமைப்பு ரீதியான இன அழிப்பை மேற்கொள்வதிலும் கவனம் செலுத்தி வந்ததது. தற்போது இலங்கைக்கு மீண்டும் காலஅவகாசம் வழங்குவது உறுதியாகியுள்ள நிலையில், இவ்விடயம் குறித்து வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் தமது கருத்துக்களை இலக்கிற்கு வழங்கியுள்ளனர்.

## தமிழ் மக்களின் எண்ணங்களைவெளிப்படுத்தும் பிரதிநிதிகளாய் த.தே.கூ இருக்கவேண்டும்

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் ந.திவாகரன்



ஆயுத போராட்டம் முடிவுக்கு வந்து பத்து ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் பாதிக்கப்பட்ட எமது இனத்திற்கு நீதி என்பது கானல் நீராகிவிட்டது. சர்வதேச பின்னணியில் 2015ல் ஜெனீவாவின் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை கொண்டு வரப்பட்ட நிலைமாறுகால நீதியை தமிழ் மக்கள் தங்கள் துயரைநீக்கும் சிறு மருந்தாக நம்பினார்கள். அதையும் தமிழ் பிரதிநிதிகளின் ஆதரவுடனான காலநீடிப்பு என்றவகையில் இழுத்தடிப்பு செய்வது நிலைமாறுகால நீதியையும் தமிழ் மக்கள் ஏமாற்று சாதனமாக எண்ணிவிட தூண்டுகின்றது.

ஜெனீவாவின் 40 வது கூட்டத்தொடரில் இலங்கை அரசிற்கு மீண்டும் ஓர் காலஅவகாசம் கொடுப்பதா? இல்லையா? என்பது குறித்து தமிழ் தலைமைகளிடையே முரண்பாடுகள் நிலவுகிறது. இது குறித்த விவாதங்களும் தொடர்வதாகவே அறிகின்றோம். எமக்கான நீதி குறித்து தெளிவும் போதிய புரிதலும் இல்லாமல் இந்த விடயம் விவாத பொருளாக மாறியுள்ளமை பெரும் துயரமாகும். இது பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் மிகப்பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சனைகளுக்கு எதிராக போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்கும்போது மீண்டும் ஓர் கால அவகாசம் அளிப்பது குறித்து தமிழ் தலைமைகள் சிந்திப்பது அறவழியிலான போராட்டங்களை முன்னெடுக்கும் எமது மக்களுக்கு செய்யும் வரலாற்று துரோகமாகும். எமது அரசியல் பிரதிநிதிகள், தமிழர்களின் பிரதிநிதிகளாய் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை சர்வதேச அரங்கில் வெளிப்படுத்தும் பிரதிநிதிகளாய் இருக்க வேண்டும் என்பதே யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய தலைவர் என்ற முறையிலும் நீதிக்காக வீதிகளில் கண்ணீருடன் போராட்டங்களை முன்னெடுத்து வரும் தாய்மார்களின் சார்பிலும் தமிழ் அரசியல் தலைமைகளே பாதிக்கப்பட்ட எமது மக்களின் பக்கம் நின்று முடிவுவெடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## கூட்டமைப்பு இனியும் அரசுக்கு கால அவகாசம் கொடுப்பதை நிறுத்தவேண்டும்.

### வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் செல்வராணி



தமிழ் தேசிய கூட்டமைப்பு இனியும் அரசுக்கு கால அவகாசம் கொடுப்பதை நிறுத்த வேண்டும். எமது நிலையை எமது கண்ணீரை எமது போராட்டங்களை எமது துயரங்களை அவர்களின் மனதில் வைத்திருந்தால் இலங்கைக்கு மீண்டும் கால அவகாசம் கொடுக்க விடமாட்டார்கள். எம்மோடு கூட நின்று மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என நாம் விரும்புகிறோம்.

இலங்கைக்கு கால அவகாசம் கொடுத்தால் அடுத்து யார் ஆட்சிக்கு வருவார்கள் என தெரியாது. எமது விடயத்தில் எவ்வாறான அணுகு முறைகளை கடைப்பிடிப்பார்கள் என்று தெரியாது. ஜெனீவா அரங்கில் எமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பானது உரிய முறையில் பயன்படுத்தி எமக்கு நீதியை பெற்றுத்தர முன்வர வேண்டும். எமது உறவுகளுக்கு நீதி கிடைக்கும்வரை நாம் முன்னெடுக்கும் போராட்டங்களிலிருந்து ஒரு போதும் பின்வாங்கப்போவதில்லை. எமக்கு அநீதி இழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் எமது சந்ததியினர் இந்த மண்ணில் பாதுகாப்பாக வாழமுடியும். குற்றம் செய்தவர்களை பாதுகாப்பதற்கான வேலைகளை நிறுத்தி அதற்கான ஆரம்பத்தை ஐ.நா வில் த.தே.கூட்டமைப்பு செய்ய வேண்டும்.

## நீதிக்காக ஏங்கும் எமது மக்களின் பக்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிற்க வேண்டும்.

### தமிழர் மரபுரிமை பேரவையின் இணைத்தலைவர் அருட்தந்தை சின்னத்துரைலியோ ஆம்ஸ்ரோங்



ஐ.நா கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள இந்த காலகட்டத்தில் தமிழ் மக்களின் வாழ்க்கையின் பின்னணியை ஆராய்ந்து பார்க்க வேண்டிய தேவை உள்ளது. தமிழ் மக்களின் போராட்டம் எதற்காக ஆரம்பிக்கப்பட்டது என்பது தொடர்பில் கவனத்தில்கொள்ள வேண்டும். தமிழ் தேசியம் கேள்விக்குறியாக்கப்பட்ட பின்னணியில்தான் ஆயுதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்பதை யாரும் மறந்துவிடமுடியாது. 2009 ஆம் ஆண்டு போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ் தேசிய அரசியலில் த.தே. கூட்டமைப்பு முக்கிய பங்கை வகிக்க ஆரம்பித்தது. இன்று தமிழர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. எனவே தமிழர்களுடைய எதிர்பார்ப்பை கூட்டமைப்பினர் முழுமையாக விளங்கிக் கொண்டு அதற்கேற்ற வகையில் செயற்படவேண்டும்.

ஐ.நா கூட்டத்தொடரில் இலங்கையின் ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் அரசின்மீது நம்பிக்கை இழந்து விட்டார்கள். துன்பத்தில் அடிபட்ட மக்களின் அபிலாசைகளை மீண்டெடுக்க வேண்டிய தேவை கூட்டமைப்பினருக்கு உள்ளது. ஆனால் அண்மைக் காலங்களில் த.தே.கூ செயற்பாடுகள் வேதனை அளிக்கக்கூடியதாக உள்ளது. ஆளும் தரப்பை பாதுகாக்காமல் வேதனையில்வாடும் தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்த முன்வரவேண்டும். அதைவிடுத்து அரசியலில் தமது இருப்புக்களை தக்கவைப்பதற்கான செயற்பாட்டை தயவு செய்து நிறுத்திக் கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக இதய சுத்தியுடன் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும். அடக்கு முறைக்கு உள்ளாகும் மக்களுக்காக குரல் கொடுப்பதுடன் இராசதந்திர ரீதியாக கூட்டமைப்பு ஐ.நாவில் முழுப்பலத்துடன் குரல் எழுப்ப வேண்டும். இதுவே இங்குள்ள மக்களின் நிலைப்பாடாகும்.

## இலங்கை விவகாரத்தை ஐ.நா பாதுகாப்பு சபைக்கு கொண்டு செல்வதற்கு கூட்டமைப்பு அழுத்தம் கொடுக்க வேண்டும்

### யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் எஸ்.பி.எஸ்.பபிலராஜ்



ஜெனீவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில் திருவிழாக்கால ஆர்ப்பரிப்புப் போன்று இம்முறையும் கால அவகாசம் வழங்குவதா? இல்லையா? என்று ஒருதரப்பினரும், ஐ.நா பாதுகாப்புச்சபையிடம் இலங்கை விவகாரத்தைப் பாரப்படுத்தி சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றினை ஏற்படுத்த வேண்டும் என்று மறுதரப்பினரும் ஜெனீவா நோக்கி படையெடுத்துள்ளனர்.

இலங்கையில் தமிழ் மக்களிற்கு எதிராக இடம்பெற்றது கட்டமைக்கப்பட்ட இன அழிப்புதான் என்பதை ஏற்றுக்கொள்கின்ற தரப்புக்கள் ஒரு போதும் உள்ளக கலப்பு விசாரணைப் பொறிமுறையினை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இலங்கை அரசுக்கு தொடர்ச்சியாக காலஅவகாசம் வழங்கப்பட்டமை வெறுமனே கண்துடைப்பு நாடகமாகவே நோக்க வேண்டியுள்ளது. உலகில் இனப்படுகொலைக் குற்றவாளிகள் சர்வதேச விசாரணைப் பொறிமுறைகளிற்கு ஊடாக தண்டிக்கப்பட வரலாற்று சான்றுகளை ஆதாரம் காட்டி இலங்கையில் தமிழ் மக்களிற்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை தேவை என்பதை வலியுறுத்த வேண்டும். இலங்கை அரசாங்கத்திடம் நாம் இனப்படுகொலைக்கான நீதியினை எதிர்பார்ப்பது என்பது கசாப்புக்கடைக்காரனிடம் ஆடு நீதியை எதிர்பார்ப்பதற்கு ஒப்பானது. ஆகவே ஜெனீவாவில் கால அவகாசம் வழங்குவதற்கு ஆதரவளிப்பதை விடுத்து இலங்கை விவகாரத்தை ஐ.நா பாதுகாப்பு சபைக்கு கைமாற்றுவதன் மூலமாக சர்வதேச விசாரணை ஒன்றிற்கு அழுத்தம் கொடுக்க த.தே.கூ முன்வரவேண்டும்.

## சர்வதேச விசாரணையை வலியுறுத்தி உலகநாடுகளுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு அழுத்தம் கொடுக்க வேண்டும்

### கிழக்கு பல்கலைக்கழக கலைகலாசாரபீட மாணவர் ஒன்றிய செயலாளர் இராஜரட்ணம் கிருபாகரன்



இலங்கையில் யுத்தகாலத்தில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் எவ்வாறு நடைபெற வேண்டும் என பலராலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜெனீவா 30-1 ஒன்று தீர்மானத்தின் பிரகாரம் உள்ளக கலப்பு விசாரணை பொறிமுறையை வலியுறுத்தி இரண்டு வருடகால அவகாசம் வழங்கப்பட்டது. அரசு இந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாத சூழ்நிலையிலேயே மீண்டும் 2017 கூட்டத்தொடரில் 34-1 ஒன்று தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை அரசுக்கு தமிழ் தலைமைகளின் ஆதரவுடன் மீண்டும் இரண்டு வருடகால அவகாசங்கள் வழங்கப்பட்டது. இந்த கால அவகாசமும் இந்த மார்ச் 24 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. ஐ.நா.மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவோம் என்று இலங்கை அரசு ஜெனீவாவில் வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் தீர்மானத்தின்படி உள்ளக கலப்பு விசாரணைக்கான எந்தவித முன்னேற்பாடுகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. யுத்த விசாரணை மற்றும் அரசியல் தீர்வு விடயங்களில் த.தே.கூட்டமைப்பின் பங்களிப்பினை தமிழ் மக்கள் அதிகளவில் எதிர்பார்க்கின்றனர்.

தமது அபிலாசைகளை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையிலேயே கூட்டமைப்பிற்கு தமிழ் மக்கள் வாக்களித்துள்ளனர். எனவே த.தே.கூ இது தொடர்பில் அதிக கவனம் செலுத்தவேண்டும். மீண்டும் ஒருகால அவகாசம் வழங்குதல் என்பது தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு செயற்பாடாகவே பாதிக்கப்பட்ட மக்களாலும் சிவில் அமைப்புக்களாலும் கருதப்படுகின்றது. சர்வதேச விசாரணை தொடர்பில் இலங்கை அரசுக்கும் ஏனைய உலக நாடுகளுக்கும் அழுத்தம் கொடுப்பதில் த.தே.கூ அதிகளவு கூடுதலான கவனம் செலுத்த வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.

## தமிழ்த் தலைமைகளே எமது மக்களுக்காக குரல் கொடுங்கள்.

### மனிதஉரிமைகள் செயற்பாட்டாளர் திருமதி வந்தனா போல்அருள்



தமிழ் தேசிய கூட்டமைப்பு இலங்கை அரசையே தீர்மானிக்கும் சக்தியாக இன்று விளங்குகிறது. கூட்டமைப்பிடம் அரசியல் இராசதந்திர நிலைகளில் அதிகாரங்கள் குவிந்துள்ள போதிலும் அந்த அதிகாரங்களை அவர்கள் பாதிக்கப்பட்ட எமது மக்களிற்கு நீதியை பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்துவதில் அக்கறை கொள்ளவில்லை என்பதே வேதனைக்குரிய விடயமாகும்.

அன்மைக்காலமாக கூட்டமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பில் மக்களின் மனங்கள் சலித்துப் போய்விட்டது. தமிழ் மக்களின் தீர்வுக்காக இவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க முடியும். ஆனால் எதையும் முழுமையாக நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்தவில்லை என்பது யதார்த்தமான உண்மையாகும்.

பெரும்பாண்மை இனத்தின் அரசியல் தலைமைகள் இலங்கை மீது முன்வைக்கப்படும் அனைத்து குற்றச் சாட்டுகளிலிருந்தும் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக அரசியல் முரண்பாடுகளை மறந்து ஜெனீவாவில் ஒன்றிணைந்து நிற்கிறார்கள். ஆனால் எமது தலைமைகளின் செயற்பாடுகள் இதற்கு நேர் எதிராகவே உள்ளது. எமது பிரதிநிதிகள் தமது பதவிகளை தக்க வைப்பதற்காக கிடைத்த வாய்ப்புக்களை பயன்படுத்தாமல் அரசின் பின்னால் இருக்கிறார்கள். சிங்கள அரசியல் தலைமைகளுக்கு குரல்கொடுப்பதற்கு உலகிலே எத்தனையோ சக்திகள் உள்ளது. ஆனால் எமது மக்களுக்காக குரல்கொடுப்பதற்கு யாரும் அற்ற நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது. எனவே எமக்காக குரல் கொடுங்கள். ஐக்கிய நாடுகள் சபையின் தற்போது ஆரம்பித்துள்ள 40 ஆவது அமர்வு மிக முக்கியமானது. இதில் இலங்கை அரசுக்கு மேலும் கால அவகாசம் கொடுக்கும் நிலைப்பாட்டை தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுக்குமாக இருந்தால் இனி அவர்கள் மேல் எந்த நம்பிக்கையும் தமிழ் மக்கள் வைக்கப்போவதில்லை என்பதை இவர்கள் வரலாற்றில் உணர்வார்கள்.

## மனித உரிமைகளை கண்காணிக்க விசேட பிரதிநிதிகளை இலங்கைக்கு நியமிக்க வேண்டும் என ஐ.நாவிடம் கூட்டமைப்பு கோரவேண்டும்.

### தமிழ் மக்கள் கூட்டணியின் சட்ட விவகாரங்களின் உப செயலாளரும் சட்டத்தரணியுமான திருமதி ரூபா தம்பித்துரை சுரேந்திரன்



ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை அரசு தமக்கு இரு வருடகால அவகாசம் கோரியிருந்தார்கள். ஆனால் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. தமிழ் மக்கள் பிரதிநிதிகளான தமிழ் தேசிய கூட்டமைப்பு, இம்முறை மீண்டும் ஒருமுறைகால அவகாசம் இலங்கைக்கு வழங்கக் கூடாது என வலியுருத்த வேண்டும். அதைத்தான் மக்கள் போராட்டங்களின் மூலம் வலியுறுத்துகிறார்கள்.

காலஅவகாசம் வழங்கப்பட்டால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் உள்ள சாட்சியங்கள் அனைத்தும் அழிந்து போய்விடும் அதனால் நீதிகிடைக்காமல் போய்விடும் என்பதை குறிப்பிடவேண்டும். தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கும் போர் குற்றங்களை நீதி கேட்கும் வகையில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த கூட்டமைப்பு கோர வேண்டும். ஐ.நாடுகள், மனிதஉரிமைகளை கண்காணிக்க விசேட பிரதிநிதிகளை இலங்கைக்கு நியமிக்க வேண்டும். மனித உரிமைகள் சபையால் வரும் பிரதிநிதிகள் அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அவர்களிடம், காணாமல் போனவர்கள் பற்றிய விபரங்களை அறிக்கையிட கோர வேண்டும். அனைத்துக்கும் மேலாக தமிழ் மக்கள் இவர்களை நம்பி வாக்களித்தார்கள் என்பதை விளங்கி நம்பிக்கை துரோகம் செய்யாமல் மக்களுக்கு நீதிகேட்டு குரல் கொடுக்கவேண்டும்.

## கூட்டமைப்பானது கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

### உலகத் தமிழ் மாணவர் ஒன்றிய கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர். வேலுப்பிள்ளை மாதவமேஜர்



எமது மக்களின் உரிமைகளுக்காக நாம் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டிய காலமிது. மிக முக்கியமாக தமிழ் மக்களால் பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு இன்று உலகமெங்கும் உலாவரும் த.தே. கூட்டமைப்பினரது பாரியபொறுப்பாகும். தற்கால அரசியல் சுழற்சியில் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அதனை கூட்டமைப்பினர் தவறவிட்டுள்ளார்கள். எனவேதான் மக்களே தம் உரிமைகளை பெறுவதற்கு அறவழிப்போராட்டங்களை ஆரம்பித்தார்கள். இன்று மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்களில் அரசியல் கட்சிகள் முகத்தைக் காட்டி தம்மை நியாயப்படுத்திக்கொள்கின்றார்கள்.

த.தே.கூட்டமைப்பே! காலம் எமக்கான நீதிக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தந்துள்ளது. அதை சரியாக எம் மக்களுடன் சேர்ந்து நின்று சர்வதேச விசாரணையை வலியுறுத்துங்கள். என்ன செய்வது என்று தெரியாமல் வீதிகளில் இறங்கி போராடும் மக்களுக்கு ஐ.நாசபை தனது நீதியை வழங்கட்டும். பேச்சுவார்த்தை நடத்துவதாலும். தீர்மானங்கள் நிறைவேற்றுவதாலும். அபிவிருத்தி மேற்கொள்வதாலும் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்கு நீதி கிடைத்துவிடப்போவதில்லை.

அரசியல்வாதிகள் தங்கள் சுயநல சிந்தனைகளை புறந்தள்ளி கொள்கையின் கீழ் ஒன்றுபட்டு ஒற்றுமையுடனும் உறுதியுடனும் ஐ.நா.மனித உரிமை தளத்திலே பயணியுங்கள். மீண்டும் மீண்டும் காலம் எமக்கான சந்தர்ப்பத்தை தராது. கிடைத்த சந்தர்ப்பத்தை மக்களுக்காக பயன்டுத்தி நீதியினை நிலைநாட்டுங்கள். அரசுடன் சேர்ந்து உங்கள் நலன்களுக்காக உங்களை நம்பி வாக்களித்த மக்களை கைவிட்டுவிடாதீர்கள். யுத்தம் முடிந்து 10 வருடங்கள் முடிவடைந்தும் எமது மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. 2017 இல் நீங்கள் வழங்கிய கால அவகாசம் தமிழ் பிரதேசங்களில் கட்டமைப்பு ரீதியான இனஅழிப்பை மேற்கொள்வதற்கான ஒரு ஊக்க மருந்தாகவே அரசிற்கு பயன்பட்டுள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள். எமது மக்களின் கண்ணீர் காயவில்லை. அவர்களின் ஏக்கங்களை உணர்ந்து மக்களுக்காக ஐ.நாவில் இதயசுத்தியுடன் உங்கள் குரல்கள் ஒலிக்கவேண்டும். இதுவே எமது மக்களின் எதிர்பார்ப்பு.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜெனீவாவும்

கணிதன்

ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டம் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் சர்வதேசத்தைப் பிழையாக வழிநடத்தி மௌனிக்கச் செய்யப்பட்டது. அப்போது சர்வதேச சமூகமும் இலங்கை அரசின் செயலை வெகுவாகப் பாராட்டியிருந்தது. மகிந்தராஜபக்ச வல்லாதிக்க நாடுகளுக்கு வழங்கிய உத்தரவாதத்தை நடைமுறைப்படுத்தாமையால் இலங்கை அரசின்மீது அவர்கள் அதிருப்தியடைந்தனர். இதன் விளைவாக மகிந்த அரசு யுத்த சூழலில் கடைப்பிடிக்க வேண்டிய மனித உரிமைகள், யுத்த விதிமுறைகள், மனிதநேயப் பண்புகள் ஆகியவற்றை மீறியுள்ளதாக குற்றம் சுமத்தி ஐநா மனித உரிமைகள் ஆணையகத்தின் நேரடிப் பார்வையின்கீழ் இலங்கை அரசைக் கொண்டுவந்தன.

**அண்மையில் பிரதமர் கிளிநொச்சிக்கு விஜயம் செய்தபோது கிளிநொச்சி ஜமீன் என்று செல்லமாக அழைக்கப்படும் சிறிதரனிடம் ஒரு கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவதற்கான கல்லை தனது கைகளால் கொடுத்து தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அபிலாசைகளுக்கும் சமாதிகட்டும் பணியைக் கச்சிதமாகச் செய்துவிட்டு புன்சிரிப்புடன் அவரது தோளில் தட்டிக்கொடுத்தார்.**

யுத்தத்தின் இறுதிப் பகுதியில் சாட்சிகளற்ற யுத்தத்தை நடத்த விரும்பியிருந்த மகிந்த அரசு ஐ.நாவின் மனிதாபிமான உதவிகள் யுத்தப் பிரதேசத்தில் சிக்கியிருந்த மக்களை சென்றடையாத வண்ணம் தடுத்திருந்தது. ஊடகவியலாளர்கள் யாரையும் யுத்தப் பிரதேசத்திற்குச் சென்று செய்தி சேகரிக்க அனுமதிக்கவில்லை. ஆனால் இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக செய்திமதியினூடான படங்கள் சாட்சிகளாக மாறிவிட்டன.

சர்வதேச சமூகத்துடனான இலங்கை அரசின் உறவே தமிழர்களுக்கான நீதியை தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ளது.



இந்தப் பின்னணியிலேயே இன்றைய ஜெனிவா அமர்வுகளை உற்றுநோக்க வேண்டியுள்ளது. இதில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் வழங்கிய ஆணையை முறையாகப் பயன்படுத்தி சர்வதேச சமூகத்தினூடாக இலங்கை அரசை வழிக்குக்கொண்டுவந்து தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குவதற்கும் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை மதித்து அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கும் தனது பங்களிப்பைச் செவ்வனே செய்துள்ளதா என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சொல்லில் தொங்கவேண்டாம் உள்ளடக்கத்தைப் பாருங்கள் என்று சொல்லும் கூட்டமைப்பின் புதிய முக்கியஸ்தராக மாறியுள்ள சுமந்திரன் ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். யுத்தம் என்பது இரண்டு நாடுகளுக்கு இடையில் அல்லது அதற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இடையில் நடப்பது. பயங்கரவாதத்திற்கு எதிராக அரசினால் மேற்கொள்ளப்படுவது தாக்குதல். அத்தகைய தாக்குதல்கள் போராடும் அமைப்புகளின் முகாம்களை இனங்கண்டு அதனை அழித் தொழிப்பதாகவும், போராளிகளை கைது செய்வதாகவும் அமையும். இந்தியா சமீபத்தில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையை பயங்கரவாதிகள் இலக்குமீது நடைபெற்ற தாக்குதல் என்றே குறிப்பிட்டுள்ளது. இதன் மூலம் தான் யுத்தத்தை நடத்தவில்லை என்று ராஜதந்திர மொழியில் கூறியுள்ளது.

உள்நாட்டில் தனது சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகவும் அனைத்து சிறுபான்மை தேசிய இனங்களும் தனது மேலாதிக்கத்தின் கீழ் இரண்டாந்தரப் பிரசைகளாகவும் வாழவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டே இலங்கை அரசு அவ்வப்போது இந்நாட்டின் சமபங்காளிகளான தமிழ்த் தேசிய இனத்தின் மீது தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தி வந்துள்ளது. இதனை எதிர்த்து தமது சுயமரியாதைக்காகவும், தனது அடையாளத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் தமிழ்த் தேசிய இனம் தனது உரிமைகளை நிலைநாட்டிக்கொள்வதற்கான போராட்டத்தையே சிறிலங்கா அரசு பயங்கரவாதம் என்று சித்திரித்திருந்தது. அந்த பயங்கரவாதத்தையே யுத்தப் பிரகடனம் செய்து தனது சொந்த மக்களையும் அவர்களது வாழ்வுரிமையையும் சீரழித்துள்ளது.



இன்று பிரதமர் ரணிலும் பிரிந்திருக்கும் நாட்டை அரசியல் தீர்வின் மூலமே ஒன்றிணைக்க முடியும் என்று கூறியிருக்கின்றார். அப்படியென்றால் தவறிழைத்தது யார்? என்பது இங்கு சொல்லாமலே விளங்கும்.

யுத்தம் முடிவடைந்து சுமார் ஏழுமாதங்களின் பின்னர் வன்னியின் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த துணுக்காய் பிரதேசத்தில் அதாவது ஏ9 வீதியின் மேற்குப் புறமாக மீள்குடியேற்றம் நடைபெற்றிருந்தது. 2010ஆம் ஆண்டின் பொதுத்தேர்தல் முடிவடைந்த கையுடன் ஏனைய பிரதேசங்களிலும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகியிருந்தன. இதனையடுத்து மக்களின் அமோக ஆதரவைப் பெற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வன்னியின் மீள்குடியேற்ற நடவடிக்கையை நேரில் சென்று பார்வையிட்டனர். இதன்போது மக்கள் வழங்கிய வாக்குமூலங்களை அன்று தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டு அரசியலுக்கு அறிமுகமாகியிருந்த சுமந்திரன் மக்களிடமிருந்து வந்த கருத்துக்களைப் பதிவு செய்துகொண்டார். இதனையே ஒரு ஆவணமாகத் தயாரித்து அந்த வருடம் யூன்மாதம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. அப்போது ஜெனிவாவிற்கும் அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நேரத்தில் ஜெனிவாவின் அழுத்தம் காரணமாக அரசு மெக்ஸ்வல் பரணகம தலைமையில் எல்எல்ஆர்சியை நியமித்ததும் அதனைத் தொடர்ந்த சம்பவங்களும் அனைவரும் அறிந்ததே. இந்த ஆவணத்தின் அடிப்படையிலேயே 2012ஆம் ஆண்டு ஐநாவிற்குச் சென்று தமிழ்த் தரப்பின் நியாயங்களை எடுத்துச் சொல்லி வாதாடப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருத்து வெளியிட்டிருந்தது. பின்னர் அது செல்லவில்லை என்பது வேறுவிடயம். இது கூட்டமைப்பு செய்த முதலாவது தவறு.

எல்எல்ஆர்சியின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு காலஅவகாசம் வழங்கிய ஐ.நா. 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை அரசாங்கம் அதன் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறியது. இந்நிலையில் 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஏற்கனவே இருந்ததைவிடவும் இரண்டு நாடாளுமன்ற ஆசனங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குக் கிடைத்தன. கடந்தமுறை தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்குப் பிரவேசித்த

தொடர்ச்சி 10 ஆம் பக்கம் →

# ஜெனீவா - சிறீலங்கா அரசும், தமிழ் இனமும் மோதும் களம் என்பதை நாம் உணரவேண்டும்

**வேல்ஸ் இல் இருந்து அருஷ்**

ஐக்கிய நாடுகள் சபையின் 40 ஆவது கூட்டத்தொடர் இந்தவாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் அதில் பங்குபற்றி தமது நீதிக்கான தேடலைத் தொடங்கியுள்ளது தமிழினம். ஐ.நா முன்றலில் சிறீலங்கா அரசு மேற்கொண்ட போர்க்குற்றங்கள் தொடர்பான புகைப்படங்களின் காட்சியும், ஐ.நா நோக்கிய கவனயீர்ப்புப் போராட்டங்களையும் புலம்பெயர் தமிழ் உறவுகள் ஆரம்பித்துள்ளன.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அனைத்துலகத்தின் முன் தமது கோரிக்கைகளை முன்வைத்து கிளிநொச்சியில் இந்த வாரம் மிகப்பெரும் பேரணி ஒன்றை மேற்கொண்டிருந்தனர். சிறீலங்கா அரசுக்கு ஆதரவாக செயற்படும் தமிழ் கூலிப்படையினர் அதனை குழப்ப முற்பட்டபோதும், மக்கள் எழுச்சியானது மிகப்பெரும் சக்தியாக அங்கு மாறி வருவதை நாம் காணமுடிகின்றது.

இந்த நிலையில் தமிழ் மக்களுக்கு ஆதரவாக தற்போதும் குரல் கொடுக்கும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் நவநீதம்பிள்ளை அவர்கள் தெரிவித்துள்ள கருத்து இங்கு முக்கியமானது.

அதாவது மறப்போம் மன்னிப்போம் என தென்ஆபிரிக்கா முன்னர் தெரிவித்த பாணியில் சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வடபகுதி பயணத்தின் போது கருத்து ஒன்றைத் தெரிவித்திருந்தார். ஆனால் சிறீலங்கா உறுதியளித்த பொறுப்புக்கூறல் மற்றும் நீதி தொடர்பான விடயங்களை அவர் மறந்துவிட்டார் என தெரிவித்திருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க தென்னாபிரிக்காவின் போரின் பின்னரான நடவடிக்கைகளை பின்பற்ற முற்படுகின்றார். ஆனால் தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இழப்பீடுகளும் வழங்கப்பட்டன. ஆனால் அது கூட ஒரு முழுமையானது அல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

அதாவது சிறீலங்கா அரசு மேற்கொண்ட போர்க்குற்றங்களையும், இனப்படுகொலையையும் மன்னிப்பதற்கோ அல்லது மறப்பதற்கோ நவநீதம்பிள்ளை கூட தயாராகவில்லை என்பது தான் அதன் பொருள். ஆனால் எமது தமிழ் அரசியல்வாதிகள் என்ன செய்கின்றனர்?



ஒரு பிரிவினர் சிறீலங்கா அரசை மன்னித்து அதன் மூலம் மக்கள் சிந்திய குருதியில் தமது அரசியல் வியாபாரத்தை விஸ்தரித்துக்கொள்ள முற்பட்டு நிற்கின்றனர். மறு தரப்பினர் அதற்கும் ஒருபடி மேல் சென்று பாதிக்கப்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் தாமாக முன்வந்து நீதிக்காக ஒருங்கிணைக்கப்பட்ட மக்கள் போராட்டத்தை மேற்கொண்டபோது அதற்குள் புகுந்து குழப்பம் விளைவிக்கின்றனர்.

ஏன் இந்த நிலைமை?

தமது அரசியல் அடித்தளத்தை ஆட்டம் காணவிடாது பாதுகாப்பதற்கான அவர்களின் முயற்சியே இது. தியாகதீபம் திலீபன் கூறிய மக்கள் புரட்சி ஒன்று மெல்ல மெல்ல விரிவாக்கம் பெற்றுவருவதைத்தான் கடந்த வாரம் கிளிநொச்சியில் இடம்பெற்ற போராட்டம் எடுத்துக்காட்டுகின்றது. அதாவது தமிழ் அரசியல்வாதிகளின் ஆதரவுகள் இன்றி தமிழ் மக்களால் ஒழுங்கமைக்கப்பட்ட போராட்டம் அது. அதனைப் பொறுத்துக்கொள்ள எமது அரசியல்வாதிகளால் முடியவில்லை.

இதனிடையே புலம்பெயர் தேசத்தில் தமிழ் அமைப்புக்கள் என்ன நடவடிக்கையை மேற்கொள்ளப்போகின்றனர் என்பது குறித்து தமிழ் மக்கள் அதிக கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர்.

ஆனால் ஒரு காலத்தில் சிறீலங்கா அரசுக்கு மிகப்பெரும் சவாலாக விளங்கிய புலம்பெயர் ஈழத்தமிழ் அமைப்புக்கள் தற்போது மிகவும் பலவீனமான நிலையில் இருப்பது சிறீலங்கா அரசுக்கு மிகவும் அனுகூலமான ஒரு சூழலை அங்கு ஏற்படுத்தியுள்ளது.

அதுமட்டுமல்லாது, அவர்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள அதிகார மற்றும் வியாபாரப் போட்டிகள் தமிழ் இனத்தின் விடுதலையை மேலும் பின்நோக்கி நகர்த்தியுள்ளது. போரில் காணாமல்போனவர்களின் பெற்றோர்களை ஜெனீவாவுக்கு அழைத்துச் சென்று அவர்களின் மூலம் கருத்துக்களைக் கூறவைப்பது என்பது சிறீலங்கா அரசுக்கு மிகுந்த பின்னடைவைக்கொடுக்கவல்லது.

அதனைப்போல ஓய்வுபெற்ற நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் பல்துறை நிபுணர்களை அங்கு அழைத்துச் செல்வதன் மூலம் எமது கருத்துக்களுக்கு அங்கு வலிமை சேர்க்கமுடியும். ஆனால் ஒரு தரப்பு அவ்வாறான முயற்சிகளை மிகுந்த சிரமத்தின் மத்தியில் மேற்கொள்ளும்போது மற்றுமொரு தரப்பு அதற்கு மறைமுகமாக தடைகளை ஏற்படுத்துவதும், அனுசரணை வழங்குபவர்களை மிரட்டுவதும் மிகுந்த வேதனையை தருவதாக தனது பெயரைக்குறிப்பிட விரும்பாத மனித உரிமை செயற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒரு சில தரப்பினரின் இவ்வாறான நடவடிக்கை மூலம் தான் நாம் கடந்த பத்து வருடங்களை இழந்திருந்தோம். ஆனால் அது தற்போதும் தொடர்கின்றது.

ஆனால் இவற்றைப் புறம்தள்ளி எதிர்வரும் ஆண்டுகளை எமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்குரிய செயற்பாடுகளை நாம் முன்னெடுக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் எமக்கு ஆதரவான ஒரு நிலைப்பாட்டை எடுப்பதற்கு ஏதுவான செயற்பாடு ஒன்றை நாம் எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் சிந்திப்பதே தற்போதைய நிலையில் எமக்கு அவசியமானது.

ஜெனீவாவுக்கு தனித்தனியாகச் செல்லும் தமிழ் அமைப்புக்கள் அங்கு ஒரு ஒன்றுகூடலை மேற்கொண்டு தமக்கு என ஒரு பொதுவான கோரிக்கை மனுவை உருவாக்கி அதன் மூலம் அனைத்துலக பிரதிநிதிகளை அணுகி எமது கோரிக்கைகளை வலுப்பெறச் செய்யமுடியும்.

தமிழகத்தில் இருந்து வரும் அறிஞர்கள் மற்றும் அரசியல்வாதிகளும், உலகின் பல பகுதிகளில் இருந்தும், ஈழத்தில் இருந்தும் வரும் அறிஞர்களும் அரசியல்வாதிகளும் தமக்குள் ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டு ஒருமித்த குரலில் பேசுவதன் மூலம் அனைத்துலகத்தை எமது கோரிக்கைகளை கேட்கவைக்க முடியும் என தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

உலகில் உள்ள பல நாடுகளில் அந்த



தொடர்ச்சி 9 ஆம் பக்கம் →

8ஆம் தொடர்ச்சி பக்கம் →

## ஜெனீவா - சிறீலங்கா அரசும், தமிழ் இனமும் மோதும் களம் என்பதை நாம் உணரவேண்டும்

நாடுகளின் உள்ளக அரசியலில் பங்குபற்றும் பல தமிழ் பிரதிநிதிகள் உள்ளனர், அவர்களை ஒருங்கிணைத்து ஜெனீவாவில் பேசவைக்க முடியுமா என்பது தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும்.

எமது அமைப்புக்கள் பல கவனயீர்ப்புப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர், ஆனால் அந்த போராட்டங்களின் மூலம் நாம் கூற முற்படும் தகவல்களை யாரைச் சென்றடைகின்றன? வெளிநாட்டவர்களையா? அல்லது தமிழ் மக்களையா?

தமிழ் மக்களுக்கு தகவல்களை சொல்வதன் மூலம் நாம் ஜெனீவாவில் எதனைச் சாதிக்க முடியும்? சிறீலங்காவில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் மற்றும் போர்க்குற்றங்களை தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். எனவே நாம் மேற்கொள்ளும் போராட்டங்கள் அனைத்துலக நாடுகளின் பிரதிநிதிகளின் கவனத்தை எமது பக்கம் திருப்ப வேண்டும்.

நாம் அழுத்தங்களை கொடுக்காத வரையிலும், அனைத்துலகம் சிறீலங்கா அரசின் கருத்துக்களை கேட்பதுடன், கால அவகாசமும் வழங்கவே செய்யும். அனைத்துலக சமூகத்திடம் இருந்து சிறீலங்கா மறைக்கும் விடயங்களை நாம் புலம்பெயர் தளத்தின் மூலம் வெளிக்கொண்டுவர முடியும். எரித்திரியா அரசு தான் மேற்கொண்ட மனித உரிமை மீறல்களை மறைப்பதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பு பிரதிநிதிகளின் பயணத்தை தடுத்தபோது, ஐ.நா அதிகாரிகள் ஜெர்மனியிலும், சுவிஸ்லாந்திலும் இருந்த எரித்தரிய மக்களின் புலம்பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து தமக்கு தேவையான தகவல்களைப் பெற்றுக்கொண்டனர். 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த சந்திப்பில் ஐ.நா மனிதஉரிமைகள் அமைப்பின் எரித்திரியாவுக்கான பிரதிநிதி சீலா கீதருத் கலந்துகொண்டிருந்தார். அதாவது ஜெனீவாக்களம் என்பது தமிழ்க் குழுக்களின் அரசியல் போட்டிக்கான களமல்ல. சிறீலங்கா அரசும், தமிழ் இனமும் மோதும் களம் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் மாநாட்டில் அலைகடலென திரண்ட பெண்கள்





தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பெண்கள் எழுச்சி மாநாடு இன்று காலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் எழுச்சியுடன் நடைபெற்து.

மாநாட்டில் வடகிழக்கின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பல நூற்றுக்கணக்கான பெண்கள் பங்கெடுத்திருந்தார்கள். தமிழ் கலாச்சார ஊர்வலத்துடன் ஆரம்பமான பேரணியானது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்கெடுத்தபோது உயிர் நீத்த பொதுமக்கள் நினைவு தூபியில் அஞ்சலி செலுத்திய பின்னர் ஊர்வலம் வீரசிங்கம் மண்டபத்தை சென்றடைந்தது.

நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொதுச் செயலாளர் கஜேந்திரன் உப தலைவர் சட்டத்தரணி மணிவண்ணன் மற்றும் மத தலைவர்கள், மகளிர் அணிகள் கலந்து சிறப்பித்தனர். மண்டபம் நிறைந்த பெண்கள் வெள்ளத்தில் மாநாடு மிதந்தது. மார்ச் 8ம் திகதி சர்வதேச மகளிர் தினத்தை மையமாக வைத்தே மாநாடு இடம்பெற்றது.

தொடர்ச்சி 9 ஆம் பக்கம் →

## கால நீடிப்பு பற்றிய தமது நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக அறிவிக்குமாகூட்டமைப்பு?

### கேள்வி எழுப்புகின்றது தமிழ் தேசிய அவதானிப்பு மையம்

கொடுக்கக்கூடாது என்பதற்காக, மேற்கு நாடுகளால் பெருமளவுக்கு மென்மையாக்கப்பட்டே வெளியிடப்பட்டன. அதனைக் கூட நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வரவும் இல்லை. அதனை நடைமுறைப்படுத்துவதில் தமக்கு இருக்கக்கூடிய பற்றுறுதியை வெளிப்படுத்தவும் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களைப் பெற்ற பிரதான கட்சியாக இருப்பதால், இராஜதந்திர வட்டாரங்களில் அதன் கருத்துக்கள் எப்போதும் முக்கிய கவனத்துக்குள்ளாகின்றது. கடந்த வருடங்களிலும் அரசாங்கத்தைப் பாதுகாப்பதில் கூட்டமைப்பின் பங்களிப்பு பிரதானமாகவே இருந்துள்ளது. உள்நாட்டு அரசியலில் மட்டுமன்றி, ஜெனீவா களமுனையில்கூட அரசாங்கத்தைப் பாதுகாக்கும் வகையிலேயே கூட்டமைப்பின் தலைமை செயற்படுகின்றது.

அபிவிருத்தி என்ற பெயரில் தமிழ் மக்களின் உரிமைக்குரலையும், அவர்கள் எதிர்பார்க்கும் நீதியையும் மழுங்கடித்துவிடலாம் என்பது அரசாங்கத்தின் உபாயம். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் அதற்கு எதிராகச் செயற்பட வேண்டிய கூட்டமைப்பு, அதற்கு ஆதரவாகச் செயற்படுவது தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியளிக்கின்றது. அபிவிருத்தி என்ற பெயரில் கூட்டமைப்பு எம்.பி.க்கள் ஒவ்வொருவருக்கும் 40 கோடி வரையில் அரசாங்கத்தினால் ஒதுக்கப்படுகின்றது. இந்தப் பணத்தைக் கொண்டு சில அபிவிருத்தித் திட்டங்களை செய்தால் அடுத்த தேர்தலில் தமது வெற்றிவாய்ப்பை உறுதிப்படுத்திவிடலாம் என்ற நம்பிக்கையுனேயே எம்.பி.க்களும் செயற்படுகின்றார்கள்.

உள்நாட்டில் தம்மைப் பாதுகாப்பதற்கும், ஜெனீவாவில் கால நீடிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் கூட்டமைப்பின் ஆதரவு தேவை என்பதால், இந்த பாரிய நிதி ஒதுக்கீடு கூட்டமைப்பினரின் வாய்களை அடைக்கச் செய்துவிடும் என்பது அரசாங்கத்தின் கணிப்பு. இந்தக் கணிப்பு பெருமளவுக்குச் சரியாக உள்ளது என்பதைத்தான் நடைபெறும் சம்பவங்களும் உறுதிப்படுத்துகின்றன. ஆனால், நிர்ப்பந்தம் அல்லது அழுத்தம் காரணமாக கால நீடிப்பை வழங்கக்கூடாது என மாவை சேனாதிராஜா சொல்லியிருப்பதாகவே தெரிகின்றது.

சிறிதரன், சிவாஜிலிங்கம் போன்றவர்கள் என்தான் சொன்னாலும், அவர்களின் கருத்துக்களை கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாக இராஜதந்திர வட்டாரங்கள் கருதுவதில்லை. "கால அவகாசம் இனியும் வழங்கக் கூடாது' என்பதுதான் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்றால் அதனை கூட்டமைப்பு எம்.பி.கள் அனைவரும் கையொப்பமிட்டு உத்தியோகபூர்வமாக ஒரு மகஜராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கும், உறுப்பு நாடுகளுக்கும் அனுப்பிவைக்க வேண்டும்."

7ஆம் தொடர்ச்சி பக்கம் ➔

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜெனிவாவும்

சுமந்திரன் இம்முறை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநியாகச் சென்றார்.

நாடாளுமன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்தவுடன் ஜெனிவா கூட்டத்தொடரும் ஆரம்பமானது. அப்பொழுது அவசர அவசரமாக வெளியுறவு அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட மங்களசமரவீரவுடன் சுமந்திரனும் ஜெனிவா சென்றிருந்தார். இலங்கை அரசின் செயற்பாடுகளால் அதிருப்தியுற்றிருந்த அன்றைய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயத் ராட் அல்ஹுசைன் அவர்களது அறிக்கை காரசாமாக இருந்தது. அமெரிக்காவின் அனுசரணையுடன் ஆட்சிபீடமேறிய ஐ.தே.க. மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னும் போர்வையில் இலங்கை தமிழரசுக் கட்சியும் ஆதரவு வழங்கியதால் அரசாங்கத்தை பாதுகாக்கும் நோக்கில் அந்தத் தீர்மானத்தை வலுவிழக்கச் செய்வதில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தன்னிச்சையாக முடிவுகளை மேற்கொண்டு செயற்பட்டிருந்தார். கூட்டமைப்பின் ஒற்றுமை கருதியும் ஏதேனும் ராஜதந்திர நடவடிக்கைகள் இருக்கலாம் என்ற அடிப்படையிலும் அங்கத்துவக் கட்சிகள் பலமான எதிர்ப்பினை வெளியிட வில்லை. இதுவே இன்று பரவலாகப் பேசப்படுகின்ற 30:1 தீர்மானமாகும்.

இதற்கு இலங்கை அரசும் இணை அனுசரணை வழங்கியிருந்தது. அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இரண்டு வருட கால அவகாசத்தையும் பெற்றிருந்தது. இலங்கை அரசாங்கம் இதனை நடைமுறைப்படுத்தாது என்பது சுமந்திரனுக்கு அன்றே தெரிந்தும் இருந்தது. அதற்கேற்ப அரசாங்கமும் கால அவகாசம் இருக்கிறது அதற்குள் எம்மால் முடிந்தவற்றைச் செய்வோம் என்று சொல்லிவிட்டு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையத்தின் கூட்டத்தொடர் முடிவடைந்தவுடனேயே அனைத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்றும் படைவீரர்களைக் காட்டிக்கொடுக்க மாட்டோம் என்றும் அரசாங்கம் கூறிவிட்டது. இந்நிலையிலேயே அதே தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 34:1 தீர்மானத்தின்கீழ் மேலும் இரண்டாண்டு கால அவகாசத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் அரசாங்கம் பெற்றுக் கொண்டது.



ஐ.நாவின் 34ஆவது கூட்டத்தொடர் முடிவடைந்தவுடன் இலங்கை அரசாங்கம் 2019 மார்ச்சுக்குள் எம்மால் முடிந்தவற்றை செய்வோம் என்று மீண்டும் கூறியது. இந்தத் தீர்மானத்தின் முக்கிய விடயங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதில் அக்கறையற்ற இலங்கை அரசு திட்டமிட்ட முறையில் ஆட்சிக்கவிழ்ப்பு நாடகமாடி இணைந்திருந்த இரண்டு கட்சிகளுக்கிடையில் முரண்பாடுகள் இருப்பதுபோலவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இருப்பே கேள்விக்குறியாகிவிட்டது போலவும் முன்னாள் மகிந்தராஜபக்சவின் கை ஓங்கியிருப்பது போலவும் அவர் புதிய கட்சியை ஆரம்பித்து அதற்கு சிங்கள மக்களின் அமோக ஆதரவு இருப்பதுபோலவும் நன்றாகவே நடித்திருந்தது. இதிலும் கூட்டமைப்பின் பங்கு இருப்பதை அனைவரும் அறிவர். இது கூட்டமைப்பின் இரண்டாவது தவறு.



தற்போதைய நிலையில் ஐ.தே.க. அரசாங்கத்தைக் காப்பதற்கும் ஜெனிவா நெருக்கடியிலிருந்து தென்னிலங்கை அரசியல்வாதிகளைப் பிணையெடுப்பதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கங்கணம்கட்டி செயற்படுகின்றது. வரவு-செலவுத்திட்டத்தில் அரசாங்கத்தை ஆதரிப்பதற்கும் ஜெனிவாவில் அரசாங்கத்தைக் காப்பாற்றியதனால் மக்கள் மத்தியில் ஏற்படவுள்ள அதிருப்தியைச் சமாளிப்பதற்கும் வரவிருக்கும் தேர்தல்களில் மக்களைச் சந்திப்பதற்கும் இலங்கை அரசாங்கம் கம்பரெலிய என்னும் கிராம எழுச்சித் திட்டத்தினூடாக ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் 40கோடி ரூபா நிதியொதுக்கியுள்ளது. இது அரசாங்கத்தைக் காக்கத் துடிக்கும் கூட்டமைப்பின் பதினான்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியைக் கொண்டு அவர்கள் விளையாட்டுக்கழகங்கள், கிராம அபிவிருத்திச்சங்கங்கள், உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளுக்கு தமது கட்சிச் செயற்பாட்டாளர்களின் மேற்பார்வையில் பணிகளை மேற்கொள்கின்றனர். ஒரு திட்டமாவது நிலையான அபிவிருத்தியை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழரசுக் கட்சிப் பிரமுகர் ஒருவர் அண்ணன் மாவையைத் தொடர்பு கொண்டால் தம்பி நான் கம்பரெலிய வேலைத்திட்டத்தில் மும்முரமாக ஈடுபட்டுள்ளேன். வீதிகள் புனரமைப்பு சனசமூகக் கூடம் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்தியுள்ளேன் நேரம் கிடைக்கும்போது கதைக்கிறேன் என்று சொல்வதாக ஆதங்கப்பட்டுக்கொண்டார்.

அண்மையில் பிரதமர் கிளிநொச்சிக்கு விஜயம் செய்தபோது கிளிநொச்சி ஜமீன் என்று செல்லமாக அழைக்கப்படும் சிறிதரனிடம் ஒரு கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவதற்கான கல்லை தனது கைகளால் கொடுத்து தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அபிலாசைகளுக்கும் சமாதிகட்டும் பணியைக் கச்சிதமாகச் செய்துவிட்டு புன்சிரிப்புடன் அவரது தோளில் தட்டிக்கொடுத்தார்.

இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் காலநீட்டிப்பு வழங்கக்கூடாது என்று கையெழுத்து இயக்கம் நடத்துவதாக ரெலோவின் சிறிகாந்தாவும் சிவாஜிலிங்கமும் கூறிவருகின்றனர். உங்கள் கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றத்தில் குழுக்களின் பிரதித்தலைவராக இருக்கிறார். முதலாவது கையெழுத்தை அவரைப் போடச்சொல்லுங்கள் பின்னர் நாங்கள் போடுகிறோம் என்று ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூறுகின்றனராம். இது தமிழீழ கோரிக்கையை முன்வைத்துப் போராடி தூக்குத்தண்டனை பெற்று பின் 1983 யூலையில் வெலிக்கடைசிறையில் கண்கள் பிடுங்கப்பட்டு கொலைசெய்யப்பட்ட குட்டிமணியின் தலைமையிலான ரெலோவின் இன்றைய நிலை.

சித்தார்த்தனைப் பொறுத்தவரையில் அவரது கட்சி எப்பொழுதுமே அரசாங்கத்துடன் இணைந்தே பயணித்துள்ளது. ஆகவே கூட்டமைப்பின் நிலைப்பாடு அவருக்கு வசதியானதே.

இதுவரைகாலமும் தமிழ் மக்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் நாம் கோட்டைவிட்டுவிட்டோம் என்று சொல்லிவந்த தமிழரசுக் கட்சி யுத்தத்தின் பின்னர் தனக்கு கிடைத்த அனைத்து வாய்ப்புக்களையும் தவறவிட்டதுடன் பங்காளிக் கட்சிகளையும் தனது மக்கள் விரோதச் செயற்பாடுளுக்கு பலிகடா ஆக்கியுள்ளது. அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்களும் தமிழ் மக்களுக்கு உண்மையான விடிவு வேண்டும் என்பதில் அக்கறையற்றவர்களாகவே உள்ளனர். இந்நிலையில் மாற்று அரசியல் தலைமை ஒன்றின் மூலமே தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க முடியும். அந்த மாற்றுசக்தி என்பது வெறுமனே தேர்தல் கூட்டாக அமைந்துவிடக்கூடாது.

இப்பொழுதும் காலம் கடந்து விடவில்லை. கூட்டமைப்பு என்னும் பெயரில் தமிழரசுக் கட்சி மேற்கொள்ளும் மக்கள் விரோத நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி ஐ.நா மன்றில் தமிழ் மக்களின் உரிமைக்கோரிக்கையின் நியாயத்தைத் தொடர்ந்தும் வலியுறுத்தும் நடவடிக்கைகள் காத்திரமான முறையிலும் வினைதிறனுடனும் மாற்றுத் தலைமையினால் முன்வைக்கப்பட வேண்டும். இதுவே தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பைத் தக்கவைப்பதற்கான சரியான நடவடிக்கையாகும்.

# இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் படங்கள் ஜெனீவா முன்றலில் காட்சிப்படுத்தல்




ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் முன்றிலில் இலங்கையில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் 40வது கூட்டத்தொடர் ஆரம்பமாகியிருக்கும் நிலையில், சர்வதேசத்திடம் சர்வதேச விசாரணையையும் நீதியையும் கோரி மனித உரிமைப்போராளி கஜன் இம்முறையும் பேரவையின் முன்றலில் நிழற்படங்களை காட்சிப்படுத்தி வருகிறார். இந்நிழற்படங்களில் இலங்கையில் கடந்த 71 ஆண்டுகளாக சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் பலரின் நிழற்படங்களும் வைக்கப்பட்டுள்ளன.

# தமிழின அழிப்பிற்கு நீதி கேட்டு ஜெனீவாவில் அணிதிரள்வோம்.

தாயகத்திலே இன அழிப்புக்கு உள்ளான எமது மக்களுக்கு நீதி வேண்டி எதிர்வரும் 04.03.2019 இல் ஜெனீவாவில் ஈகைப் பேரொளி முருகதாசன் திடலில் மக்களை அணிதிரளுமாறு தமிழர் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழின அழிப்பு நிகழ்த்தப்பட்டு ஒரு தசாப்தமாகும் நிலையில், தொடர்ந்தும் கட்டமைப்பு சார் தமிழின அழிப்பு சிறிலங்கா காலணித்துவ அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சூழலிலும், பன்னாட்டு சமூகம் இன்று வரையிலும் இதனை வேடிக்கை பார்த்த வண்ணமே உள்ளது.



தத்தமது பூகோள அரசியல் நலன்களிற்காக சிறிலங்கா அரசுடன் இணைசேர்ந்து தமிழின அழிப்பை நிகழ்த்தி, அதனூடாக தமிழர்கள் சுயாதீனமாக நிர்வகித்து வந்த தமிழீழ நிழல் அரசை இல்லாதொழித்த வல்லாதிக்க சக்திகள், இன்று அங்கு நிகழ்த்தப்பட்ட தமிழின அழிப்பை மூடிமறைக்கும் செயற்பாடுகளை செவ்வனே அரங்கேற்றி, சிறிலங்கா அரசினை அனைத்துலக விசாரணைப்பொறிமுறைகளிலிருந்து தொடர்ந்தும் காப்பாற்றி வருகின்றனர். தமிழின அழிப்பிலிருந்து எம்மைத் தற்காத்துக் கொள்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் நாம் முன்னெடுத்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமென முலாம் பூசி அதனை அழித்தவர்களும் இச் சர்வதேசமே!!!!!

எமது ஆயுத போராட்டத்தைக் கைவிட்டால் தமிழர்களிற்கான அரசியல் தீர்வினை வழங்குவோமென உறுதிமொழி கூறியவர்களும் இவர்களே !!!!!

இன்று இவர்கள் முன் நிராயுதபாணிகளாகவும் நிர்க்கதியாகவும் தமக்கான தீர்வை எதிர்பார்த்து நிற்கும் எம் இனத்தின் குறைந்த பட்ச பாதுகாப்பைக்கூட இவர்களால் உறுதிசெய்ய முடியவில்லை.

அத்துடன் இச் சர்வதேசம் தொடர்ந்தும் தனது பொறுப்பிலிருந்து தவறிச் செல்வதுடன் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டமைப்புசார் இனவழிப்பிற்கு உடந்தையாக செயற்பட்டு வரும் இந் நிலையில் ஈழத் தமிழர்களாகிய நாம், எமது தனி நாட்டிற்கான இறையாண்மை கோரிக்கையையும், அதனை சனநாயக ரீதியல் வெளிப்படுத்துவதற்கான சர்வசன பொது வாக்கெடுப்பையும் வலியுறுத்தி எமது அரசியலை முன் நிறுத்த வேண்டியது மிக மிக அவசியமாகும். இதற்கான மூலோபாயத் திட்டங்களை ஆராய்ந்து அதனை கட்டங்கட்டமாக தமிழர் இயக்கம் செயற்படுத்தி வருகின்றது.

எனவே இத்தகைய சூழலில் எமது மக்களின் வெகுசன ரீதியான தன்னெழுச்சி போராட்டங்களானது எமது இலக்கை நோக்கிய போராட்டத்திற்கு வலு சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, எம் அன்பிற்குரிய தமிழீழ மக்களே! எதிர் வரும் 04.03.2019 அன்று ஜெனீவா ஐக்கிய நாடுகள் சபையின் முன் அமைந்துள்ள ஈகைப் பேரொளி முருகதாசன் திடலில் பி.ப 2 மணிக்கு அனைவரும் எழுச்சியோடு ஒன்று திரண்டு ஒற்றுமையாய் எமது தேசிய வேணவாவை சர்வதேசத்திற்கு இடித்துரைப்போம் வாரீர்.



தமிழினப்படுகொலைக்கு நீதி கேட்டு அனைத்துலக சுயாதீன விசாரணையை வலியுறுத்தி பன்னிரண்டாம் நாளான இன்று 01/03/2019. காலை பாயேர்ன் மாநகரிலிருந்து ஆரம்பித்த மனித நேய ஈருருளிப்பயணம் இன்று 01/03/2019 பி.பகல் 16.00மணியளவில் சுவிஸ் லுசான் மாநகர சபை முன் வந்தடைந்து மாநகர உதவி முதல்வர்கள் மனித நேய பணியாளர்களை வரவேற்று எமது அறவழிப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், வாழ்த்து தெரிவித்தும் வழியனுப்பி வைத்தார்கள்.

# இலங்கை அரசின் பொறுப்பற்ற போக்கை தடுத்து நிறுத்துங்கள்- உருத்திரகுமாரன் கோரிக்கை

ஐநா மனிதவுரிமைப் பேரவைக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் அளித்த உறுதிகளை எப்போதும் நிறைவேற்றுவதாகப் பொறுப்பற்ற முறையில் கூறிவரும்



இலங்கை அரசாங்கத்தை தடுத்து நிறுத்தி, இலங்கைத்தீவில் நீதியும் பொறுப்புக்கூறலும் மீளிணக்கமும் மெய்ப்படச் செய்யும்படியும் ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளர் பசலே அம்மையாரிடம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது இது தொடர்பில் ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளருக்கு கடிதம் ஒன்றினை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அனுப்பியுள்ளார். “தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா இனக்கொலை செய்து பத்தாண்டுகள் உருண்டோடி விட்டன. ஆனால் பத்தாயிரக்கணக்கான தமிழ்மக்கள் கொலைக்கும் வல்லுறவுக்கும் கட்டாயப் புலப்பெயர்வுக்கும் ஆளாக்கப்பட்டமைக்காக ஒரே ஒருவர் கூட விசாரணை செய்யப்படவில்லை. மற்ற ஒவ்வொருவருக்கும் கண்கூடாகத் தெரிகிற ஒருண்மையை ஐநா மனிதவுரிமைப் பேரவை கண்திறந்து பார்க்க உயர் ஆணையர் பசலே உதவுவார் என நம்புகிறோம்.

இலங்கை என்பது நெகிழ்வற்ற இனநாயக அரசாகும், தமிழர்களுக்கு எதிரான காழ்ப்புணர்ச்சி அதில் ஆழ வேரூன்றியுள்ளது, ஐநா மனிதவுரிமைப் பேரவைக்கான கடப்பாடுகளை எப்போதாவது மதிக்கும் எண்ணம் அதற்குத் துளியும் இல்லை என்பதே அந்த உண்மை. வெளிப்படையாகச் சொன்னால், இப்படியல்லாமல் வேறுவிதமாகச் சிந்திப்பது மதிமயக்கமே தவிர வேறல்ல என உருத்திரகுமாரன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நீதியும் பொறுப்புக்கூறலும் நிறைவேறச் செய்வதற்கு ஐநா மனிதவுரிமைப் பேரவை யாரை நம்பியதோ அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த மூன்று மாதத்தில் மட்டும் அவர் செய்துள்ள காரியங்களை உருத்திரகுமாரன் பட்டியலிட்டுக்காட்டியுள்ளார்.

# இராணுவ வீரர்களின் தியாகம் வீணாக இந்தியா அனுமதிக்காது

## இந்திய பிரதமர் மோடி கருத்து



பீகார் மாநிலம் பாட்னாவில் தேசிய ஜனநாயக கூட்டணியின் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று நடைபெற்றது. கூட்டத்தில் இந்திய பிரதமர் மோடியும், பீகார் முதல்வர் நிதிஷ்குமாரும் கலந்து கொண்டனர். நிதிஷ்குமார், உரையாற்றும்போது பயங்கரவாதத்திற்கு எதிரான பிரதமர் மோடியின் போராட்டத்தை பாராட்டினார். பிரதமர் மோடி உரையாற்றும்போது எதிர்க்கட்சிகள் இந்திய விமானப்படையின் தைரியம் குறித்து சந்தேகம் எழுப்புகின்றன என பிரதமர் மோடி, கருத்துரைத்தார் மத்தியில் காங்கிரஸ் மெகா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் தேசம் வளர்ச்சியடையாது, மாறாக ஆட்சிக்கு வருபவர்கள் தங்களை வளப்படுத்திக் கொள்வார்கள். இப்போது இந்திய விமானப்படையின் நடவடிக்கைக்கு காங்கிரஸ் கட்சியினர் ஆதாரம் கேட்கிறார்கள். காங்கிரஸ் மற்றும் அதனுடைய கூட்டணி கட்சிகள் நம்முடைய படையை ஏன் ஊக்கமிழக்க செய்ய வேண்டும்? நம்முடைய எதிரிகள் பலன் அடையும் வகையில் அவர்கள் அறிக்கையை ஏன் வெளியிட வேண்டும்?

இந்தியா துணிச்சலான வீரர்களின் தியாகத்தை வீணாக அனுமதிக்காது. ஒவ்வொரு தியாகத்திற்கும் ஒரு பொருத்தமான பதில் கொடுப்போம் என்பதை உறுதி செய்வோம் என்று கூறியுள்ளார்.

# சிதம்பரம் நடராஜர் கோவில் 7195 கலைஞர்கள் பரதம் ஆடி உலகச் சாதனை



ஒவ்வொரு ஆண்டும் மகா சிவராத்திரியை முன்னிட்டு சிதம்பரம் நடராஜர் கோவிலில், நாட்டியக் கலைஞர்கள் ஒன்று சேர்ந்து நடனமாடுவது வழக்கம். இந்த ஆண்டு கொஞ்சம் வித்தியாசமாக தமிழ்நாடு மட்டுமல்லாமல் இந்தியா முழுவதும் இருந்து நடனக் கலைஞர்களை வரவழைத்து உலக சாதனை நிகழ்ச்சியை அரங்கேற்ற திட்டமிட்டனர், கோவில் நிர்வாகம்.

இன்று (03.03.2019) சிதம்பரம் நடராஜர் கோவிலில் அரங்கேறிய நாட்டியாஞ்சலி உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றது. இதற்கு நாடு முழுவதிலும் இருந்து பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் குறிப்பாக 5 வயதுக்கும் மேற்பட்ட நாட்டியக் கலைஞர்கள் பங்கேற்று நடனமாடினர்.

சிதம்பரம் நடராஜர் கோவிலின் ஆயிரங்கால் மண்டபத்தில் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. இதனைக் காண லட்சத்திற்கும் அதிகமான பொதுமக்கள் கோவிலில் வளாகத்திற்குள் இருப்பதால் போலீஸ் பாதுகாப்பை அதிகரித்தது, கோவில் நிர்வாகம். இந்த நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி உலக சாதனை பட்டியலில் இடம்பெறும் வகையில் கிட்டத்தட்ட 18 நிமிடங்கள் நடத்தப்பட்டது.

ஏற்கனவே இதுபோல சென்னையில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற உலக சாதனை நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியில் 5,425 பேர் கலந்து கொண்டு உலக சாதனை படைத்ததாக கூறப்படுகிறது. இதனை முறியடிக்கவே சிதம்பரம் நடராஜர் கோவிலில் உலக சாதனைக்கான நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி அரங்கேற்றம் நடைபெற்று 7,190 பேர் ஒரே நேரத்தில் நடனமாடி உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது, குறிப்பிடத்தக்கது.

# விமானி அபிநந்தனின் உடலில் உளவுபார்க்கும் கருவி பொருத்தப்படவில்லை:

இந்திய விமானி அபிந்தனின் உடலில் உளவுபார்க்கும் கருவி ஏதும் பொருத்தப்படவில்லை என மருத்துவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர். கடந்த 14ம் தேதி புல்வாமா தாக்குதலில் 40 சிஆர்பிஎப் வீரர்கள் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக கடந்த மாதம் 26ம் தேதி பாகிஸ்தான் பகுதியில் உள்ள பாலகோட் பகுதியில் தீவிரவாத முகாமின் நிலைகள் மீது இந்திய விமானப்படை



தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலின்போது அபிநந்தன் என்ற விமானி ஓட்டிய மிக்ரக விமானத்தை பாகிஸ்தான் ராணுவத்தினர் சுட்டு வீழ்த்தினர். இதில் விமானத்திலிருந்து பாதுகாப்பாக பரசூட் மூலம் வெளியே பறந்த அபிநந்தனை, பாகிஸ்தான் ராணுவம் கைது செய்தது. அதன்பின் சர்வதேச அழுத்தம், இந்தியாவின் நெருக்கடிகள் ஆகியவற்றால், 3 நாட்களுக்கு பின் அபிநந்தனை கடந்த 1-ம் தேதி வாகா எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் அதிகாரிகள், இந்திய அதிகாரிகளிடம் முறைப்படி ஒப்படைத்தனர்.

இந்நிலையில், இந்திய அதிகாரிகளிடம் அபிநந்தன் ஒப்படைக்கப்படும் முன்பு, பாகிஸ்தான் வீடியோவை பதிவு செய்ததாகவும், அதில் பாகிஸ்தான் ராணுவத்தை புகழ்ந்து பேசும்படியாக அவருக்கு நெருக்கடி கொடுத்து, இந்த வீடியோ எடுக்கப்பட்டதாவும் தெரிகிறது. இந்த வீடியோ எடுக்கப்பட்ட காரணத்தினால் தான் அபிநந்தனை இந்தியாவிடம் ஒப்படைக்க, தாமதம் ஏற்பட்டது எனவும் கூறப்படுகிறது. மேலும், அந்த வீடியோவில் சுமார் 15க்கும் மேற்பட்ட இடங்களில் 'எடிட்' செய்யப்பட்டு பாகிஸ்தான் ராணுவத்தை புகழ்ந்து பேசுவது மட்டுமே இடம் பெற்றுள்ளதால், அபிநந்தனின் கட்டாய வாக்குமூலம் பெறப்பட்டது உறுதியாகி உள்ளது. இந்திய விமானப்படை தளபதி தனோவாவை சந்தித்து பாகிஸ்தானில் தனக்கு நேர்ந்தது பற்றி விங் கமாண்டர் அபிநந்தன் விளக்கம் அளித்தார். அதைத்தொடர்ந்து, அபிநந்தனுக்கு நேற்று காலை 11.30 மணிக்கு டெல்லி துவாலக்குவான் ராணுவ மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது.

டெல்லி ராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ள அபிநந்தனை மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் சந்தித்து நலம் விசாரித்தார். அவரது குடும்பத்தினரையும் சந்தித்துப் பேசினார். இதற்கிடையே, பாகிஸ்தானிடம் சிக்கிய விங் கமாண்டர் அபிநந்தன், தன்மீது அந்நாட்டு ராணுவத்தினர் உடல்ரீதியாக தாக்குதல் நடத்தவில்லை. ஆனால், மனரீதியாக நான் மிகவும் துன்புறுத்தப்பட்டேன் என தெரிவித்ததாக செய்திகள் வந்தன. பாகிஸ்தான் உளவுத்துறையினர் அபிநந்தனின் உடலில் உளவுபார்க்கும் கருவி ஏதேனும் பொருத்தி அனுப்பியிருக்கலாம் என்ற யூகச்செய்திகளும் சில ஊடகங்களில் வெளியாகின. இந்நிலையில், டெல்லி ராணுவ மருத்துவமனையில் அவருக்கு எடுக்கப்பட்ட எம்.ஆர்.ஐ. ஸ்கேன் முடிவுகளின்படி அபிநந்தனின் உடலில் உளவுபார்க்கும் கருவி ஏதும் பொருத்தப்படவில்லை. ஆனால், அவரது முதுகுத்தண்டு எலும்பின் கீழ் பகுதியில் ஒரு காயம் ஏற்பட்டுள்ளதாகவும், பாகிஸ்தான் ஏவுகணையால் சுட்டு வீழ்த்தப்பட்ட அபிநந்தனின் போர் விமானம் கீழே விழுந்து நொறுங்குவதற்கு முன்னர் அவர் பாரசூட் மூலம் தப்பிக்க முயன்றபோது கீழே விழுந்ததில் இந்த காயம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் மருத்துவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

# ஐ.நா.சபை பின்லேடன் மகன் ஹம்ஸா பெயரை சர்வதேச பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்தது



அல்கொய்தா அமைப்பின் தலைவராக இருந்த பின்லேடன் 2011-ம் ஆண்டு பாகிஸ்தானில் அமெரிக்க அதிரடிப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கு பழி வாங்கும் வகையில் அமெரிக்கா மீதும், அதன் நட்பு நாடுகள் மீதும் தாக்குதல் நடத்துவேன் என அவரது இளைய மகன் ஹம்ஸா பின்லேடன் 2015-ம் ஆண்டில் அறிவித்தார்.

அதைத்தொடர்ந்து அவரை சர்வதேச பயங்கரவாதி என அமெரிக்கா அறிவித்தது. மேலும் ஹம்ஸா பின்லேடன் குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு ரூ.7 கோடி பரிசு தொகை வழங்கப்படும் என்றும் அறிவிப்பு வெளியிட்டது. சவுதி அரேபிய அரசும் அவரது குடியுரிமையை ரத்து செய்து விட்டதாக நேற்று முன்தினம் தெரிவித்தது.

இந்த நிலையில் ஹம்ஸா பின்லேடன் பெயரை சர்வதேச பயங்கரவாதிகள் பட்டியலில் ஐ.நா.பாதுகாப்புக்குழு சேர்த்துள்ளது. இதனால் அவர் இனி சர்வதேச அளவில் பயணம் செய்ய முடியாது. அவரது சொத்துக்களும் முடக்கப்படும்.

அத்துடன் ஆயுதங்கள் விற்பனைக்கும் தடைவிதிக்கப்படும். தற்போது அல்கொய்தா பயங்கரவாத அமைப்பிற்கு அய்மான் அல்- ஜவா கிரி தலைவராக இருக்கிறார். பின்னர் இந்த அமைப்பின் தலைவராக ஹம்சா பின்லேடன் பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விமானியை அடித்துக் கொன்ற பாகிஸ்தான் மக்கள்


புல்வாமா தாக்குதலுக்கு பழிவாங்கும் வகையில் கடந்த 26-ந்தேதி இந்திய விமானங்கள் பாகிஸ்தானுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியது. அடுத்தநாள் காலையில் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தான் விமானங்கள் இந்திய பகுதிக்குள் தாக்குதல் நடத்துவதற்கு வந்தன. உடனே இந்திய போர் விமானங்கள் அவற்றை விரட்டிச் சென்றன.

அதில் மிக்-21 என்ற விமானத்தை அபிநந்தன் ஓட்டிச் சென்றார். அவர் பாகிஸ்தானின் எப்-16 ரக விமானத்தை விரட்டிச் சென்று ஏவுகணையால் சுட்டு வீழ்த்தினார். அந்த விமானம் வெடித்து சிதறி கீழே விழுந்தது. அடுத்த வினாடி அபிநந்தன் ஓட்டிச் சென்ற விமானத்தின் மீது பாகிஸ்தான் ஏவுகணை வீசி தாக்கியது. அதில் அபிநந்தனின் விமானமும் வெடித்து சிதறி கீழே விழுந்தது.

இந்த நேரத்தில் அபிநந்தன் பரசூட் மூலம் கீழே குதித்தார். அதேபோல அபிநந்தனால் வீழ்த்தப்பட்ட பாகிஸ்தான் விமானத்தில் இருந்தும் விமானி பரசூட்டில் கீழே குதித்தார்.அபிநந்தனும், பாகிஸ்தான் பைலட்டும் தனித்தனி இடத்தில் பரசூட்டில் இறங்கினார்கள். அபிநந்தனை கிராம மக்கள் சுற்றி வளைத்து பிடித்தனர். பின்னர் ராணுவம் வந்து அவரை மீட்டது.

அதே நேரத்தில் பாகிஸ்தான் விமானி விழுந்த இடத்தையும் கிராம மக்கள் சுற்றி வளைத்தனர். ஆனால் அவர் பாகிஸ்தான் விமானி என்று அவர்களுக்கு தெரியவில்லை. அவர் இந்திய விமானி என கருதி அவரை கடுமையாக தாக்கினார்கள். இதில் அவர் படுகாயம் அடைந்தார். பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

# இந்தியாவில் பல்வேறு தாக்குதலை நடத்திய மசூத் அசார் உயிரிழப்பா?



2001-ல் இந்திய பாராளுமன்ற தாக்குதல் முதல் சமீபத்திய புல்வாமா தாக்குதல் வரையில் இந்தியாவில் ஜெய்ஷ் இ முகமது இயக்கத்தால் பல்வேறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காஷ்மீரில் பாதுகாப்பு படையினரை குறிவைத்து இப்போது தாக்குதல் நடத்தும் ஜெய்ஷ் இ முகமது இயக்கத்தின் தலைவன் மசூத் அசார். இந்தியாவில் நடத்தப்பட்ட தாக்குதல் எல்லாவற்றுக்கும் மூளையாக செயல்பட்டவர் மசூத் அசார். 2002-ம் ஆண்டில் இந்த இயக்கம் தடை செய்யப்பட்டாலும் பாகிஸ்தானில் செயல்பட்டு வருகிறது.

மசூத் அசாரை சர்வதேச பயங்கரவாதியாக அறிவிக்க இந்திய அரசு மேற்கொண்ட முயற்சியை பாகிஸ்தான் நட்பு நாடான சீனா தடுத்தது. புல்வாமா தாக்குதலை அடுத்தும் மசூத் அசாருக்கு தடை விதிக்கும் வகையில் பிரான்ஸ் ஐ.நா. நடவடிக்கை எடுக்கிறது. இதற்கிடையே ஜெய்ஷ்-இ-முகமது இயக்கத்துடன் இருக்கும் தொடர்பை பாகிஸ்தான் உறுதி செய்தது. அந்நாட்டு மந்திரி, ஜெய்ஷ் அமைப்பிடம் கேட்டோம், ஆனால் புல்வாமா தாக்குதலில் எங்களுக்கு தொடர்பு இல்லை என கூறிவிட்டது என கூறினார். அசாருக்கு சிறுநீரக கோளாறு ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியது.

இதற்கிடையே இந்திய விமானப்படை பாலகோட்டில் தாக்குதல் நடத்தியது உண்மைதான் என ஜெய்ஷ் இ முகமது இயக்கம் அறிவித்தது. இப்போது பயங்கரவாதி மசூத் அசார் உயிரிழந்துவிட்டார் என உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகியுள்ளது. இதற்கிடையே இந்திய விமானப்படை நடத்திய தாக்குதலில் மசூத் அசார் காயம் அடைந்து, மருத்துவமனையில் உயிரிழந்துவிட்டார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. இருப்பினும் அதிகாரபூர்வமாக இத்தகவல் உறுதி செய்யப்படவில்லை.

# பிரியங்கா சோப்ராவுக்கு எதிராக ஐ.நாவிடம் பாகிஸ்தான் கோரிக்கை!

இந்திய ராணுவத்தின் செயலுக்கு அரசியல் கட்சிகளும் சினிமா பிரபலங்களும் வாழ்த்துகள் தெரிவித்தனர். பொலிவுட் நடிகை ப்ரியங்கா சோப்ரா, 'ஜெய்ஹிந்த் இந்திய விமானப் படை' என்று பதிவிட்டிருந்தார்.

பொலிவுட் நடிகை ப்ரியங்கா சோப்ராவை யுனிசெப்(UNICEF) தூதர் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று பாகிஸ்தான் மக்கள் கையெழுத்து இயக்கம் தொடங்கியுள்ளனர். காஷ்மீர் மாநிலம் புல்வாமா மாவட்டத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக இந்திய விமானப்படை பிப்ரவரி 26-ம் தேதி பாகிஸ்தானிலுள்ள தீவிரவாத முகாமின்மீது தாக்குதல் நடத்தியது. இந்தியாவின் தாக்குதலுக்கு பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்தது.இந்திய ராணுவத்தின் செயலுக்கு அரசியல் கட்சிகளும் சினிமா பிரபலங்களும் வாழ்த்துகள் தெரிவித்தனர்.



பொலிவுட் நடிகை ப்ரியங்கா சோப்ரா, 'ஜெய்ஹிந்த் இந்திய விமானப் படை' என்று பதிவிட்டிருந்தார். முன்னதாக, 2016-ம் ஆண்டிலிருந்து ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அமைப்பான யுனிசெப்-ன் தூதராக ப்ரியங்கா சோப்ரா இருந்துவருகிறார்.

யுனிசெப்-ன் தூதராக இருந்து கொண்டு ஒரு நாடு எல்லை மீறி தாக்குதல் நடத்தியதற்கு ஆதரவு தெரிவித்துள்ளார். எனவே, அவரை அந்த பொறுப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று இணையத்தில் கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானிலிருந்துதான் இந்த கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. அந்த விண்ணப்பத்தில் இதுவரையில் 2,200 பேர்வரை கையெழுத்திட்டுள்ளனர்.


# விவசாயத்தின் ஆதாரமாக விளங்கிய பூச்சிகளை நம் முன்னோர்கள் நேசித்தார்கள்

பூச்சிகள் இல்லாமல் விவசாயம் சாத்தியமே இல்லை. பயிர்கள் அவற்றுக்கான நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கிக்கொள்வதில் பூச்சிகள் முக்கிய பங்காற்றி வருகின்றன.

பூச்சிகள் மூலம் எதிர்ப்புத் திறனை உருவாக்கிக் கொள்ளும் செடிதான் தரமான செடி. அதிலிருந்துதான் விதைகளைச் சேமித்தனர் நம் முன்னோர்கள். அதனால் வயலில் பூச்சிகளைக் கண்டவுடனே பயப்பட வேண்டிய அவசியமில்லை. வயலில் ஏற்பட்டுள்ள பிரச்னைக்குக் காரணம் பூச்சியா, நோயா என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நமக்குச் சளி, காய்ச்சல் போன்றவற்றை ஏற்படுத்துபவை வைரசுகள். வாந்திபேதி போன்றவற்றை ஏற்படுத்துபவை பக்ரீரியாக்கள். சொறி,சிரங்கு போன்றவற்றை ஏற்படுத்துபவை பூஞ்சணங்கள். சுகாதாரமின்மையால் குடலில் புழுக்கள் உண்டாகின்றன. தாவரங்களில் நோய்களை உண்டாக்குபவையும் இவைதான். வைரசுகள், பக்ரீரியாக்கள், பூஞ்சணங்கள், நூற்புழுக்கள் போன்றவற்றால்தான் தாவரங்களுக்கு நோய்கள் வருகின்றன.



பூச்சித்தாக்குதலால் உண்டாகும் சில அறிகுறிகளும், நோய்த் தாக்குதலால் உண்டாகும் சில அறிகுறிகளும் மேம்போக்காகப் பார்க்கும்போது ஒன்று போல தோன்றும். அதனால், குழம்பிப்போய் நோய்க்கான மருந்து, பூச்சிக்கொல்லி இரண்டையும் வாங்கிச் சிலர் தெளிப்பார்கள். இப்படிச் செய்வதால் உற்பத்தி செலவு அதிகரிக்குமே தவிர, இதனால் எந்தவிதமான நன்மையும் இல்லை. எனவே பூச்சிக்கும் நோய்க்கும் வித்தியாசத்தை முதலில் கண்டறிய வேண்டும். பூ, காய், பழம் போன்றவற்றில் உள்ள அறிகுறிகளை விவசாயிகள் எளிதாக இனம் கண்டுவிடுவார்கள்.



ஆனால் இலை, வேர், தண்டு போன்றவற்றில் ஏற்படும் பாதிப்புகளைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. அதனால் முதலில் பூச்சிகளைப் பற்றிய அடிப்படையான புரிதல் அவசியம்.

வயலில் உள்ள பூச்சிகளின் நிலைகள் மற்றும் அவற்றின் வளர்ச்சி நிலைகள் குறித்து அறிந்துகொள்ள வேண்டும். ஒரு புழு செடியில் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்தப்புழு இலையை உண்ணும் புழுவா... வேரைக் குடையும் புழுவா... தண்டைக் குடையும் புழுவா... காயைத் உண்ணும் புழுவா... எனத் தெரிந்துகொள்ள வேண்டும். அதன் பிறகு, தீமை செய்யும் பூச்சிகளை உண்ணக்கூடிய நன்மை செய்யும் பூச்சிகள் நம் வயலில் இருக்கின்றனவா எனப் பார்க்க வேண்டும். நன்மை செய்யும் பூச்சிகள் இருந்தால்... அவை தீமை செய்யும் பூச்சிகளைப் பிடிக்கும் திறனைக் கொண்டுள்ளனவா என்பதையும் அறிய வேண்டும். இப்படிப் பல்வேறு தகவல்களைத் தெரிந்துகொண்டு திட்டமிட்டுதான், தீமை செய்யும் பூச்சிகளை விரட்டியடிக்க வேண்டும். இவற்றை விரட்ட நன்மை செய்யும் பூச்சிகளைக் கூலிப்படையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நன்மை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கை, தீமை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கை, மண்ணின் ஈரப்பதம், காலச் சூழ்நிலை, பயிரின் வளர்ச்சி நிலை, பயிரின் தாங்கு திறன் ஆகியவற்றைக் கொண்டு முடிவெடுத்தால்தான் விவசாயத்தில் வெற்றிகரமான அறுவடை சாத்தியம். தாவரங்களில் அதிக நோய்களை உருவாக்குபவை வைரசுகள்தான். வைரசுகள் பரவுவதற்குக் காரணமாக இருப்பவை பலவிதமான சாறு உறிஞ்சும் பூச்சிகள். ஒரு செடியிலிருந்து அடுத்தச் செடிக்கு வைரசைக் கொண்டு செல்பவை சாறு உறிஞ்சும் பூச்சிகள்தான். வைரசு தாக்குதலுக்கு மருந்துகள் இல்லை என்பதால், சாறு உறிஞ்சும் பூச்சிகள் மீது அதிக கவனம் வைக்க வேண்டும்.

உற்பத்திக்காலம் தெரிந்துதான் ஒவ்வொரு பயிரையும் விதைப்போம். எந்தப் பயிரைச் உற்பத்தி செய்கிறோமோ... அதன் உற்பத்தி காலத்துக்குள் எந்தெந்த நாள்களில் என்னென்ன நோய்கள் மற்றும் பூச்சிகள் அப்பயிரைத் தாக்கக்கூடும் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

அவற்றை முன்கூட்டியே தெரிந்துகொண்டு 'வருமுன் காப்போம்' முறையைக் கடைப்பிடித்தால் பிரச்னையே இருக்காது. குறிப்பாக இயற்கை விவசாயத்துக்கு வருமுன் காப்போம் முறை தான் சிறந்தது. நோயோ, பூச்சியோ தாக்கிய பிறகு நடவடிக்கை எடுப்பது, சேதாரத்தை அதிகமாக்கிவிடும். வருமுன் காப்பது மூலமாகச் சேதாரத்தைக் குறைப்பதோடு, செலவுகளையும் குறைக்கலாம். நன்மை செய்யும் பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகள் பற்றிப் பார்த்திருக்கிறோம். தீமை செய்யும் பூச்சிகள் என்றால் அவை பயிரைத் தாக்கும் பூச்சிகள் மட்டுமல்ல. மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு நோயைப் பரப்பும் பூச்சிகளும் தீமை செய்யும் பூச்சிகள்தான். சேமித்து வைக்கப்பட்ட தானியங்களைச் சேதப்படுத்தும் பூச்சிகளும் உள்ளன.

அதேபோல நன்மை செய்யும் பூச்சிகள் என்றால் மற்ற பூச்சிகளைச் சாப்பிடும் அசைவ இனங்கள் என்று மட்டும் எண்ணிவிடக் கூடாது. தனது வம்சத்தையே உணவாகக் கொள்ளும் அபாயகரமான பூச்சிகளும் உள்ளன. மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பூச்சிகள், உயிரினங்களுக்கு நோயைப் பரப்பும் பூச்சிகள், களைகளைக் கட்டுப்படுத்தும் பூச்சிகள், இலைதழைகளை மக்க வைக்கும் பூச்சிகள், தடய அறிவியலில் தடம் பதிக்கும் பூச்சிகள் எனப் பல்வேறு விதமான பூச்சிகள் உள்ளன. பொதுவாக, தேனீக்களும், பட்டாம்பூச்சிகளும்தான் மகரந்தச் சேர்க்கைக்கு உதவக்கூடிய பூச்சிகள் என நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், மரத்தைக் குடைந்து உள்ளே போய்க் கூடுகட்டும் வண்டுகள், அத்திப்பழக் குளவிகள், எறும்புகள் போன்ற பல பூச்சிகள் மகரந்தச் சேர்க்கைக்கு உதவி வருகின்றன. அதேபோல மரபணு மாற்றுத்தொழில்நுட்ப ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவி செய்பவை பழ ஈக்கள். இப்படி மண்ணை வளமாக்குவதில் தொடங்கி... மனிதர்கள், கால்நடைகள் எனப் பூமியில் வாழும் உயிரினங்களின் வாழ்விலும் பூச்சிகளுக்கு முக்கியப்பங்கு உண்டு. குறிப்பாக விவசாயத்தில் பூச்சிகளின் பங்கு அளப்பரியது. இது குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு தேவை

# கடல் பசுக்களைப் பாதுகாக்க கடல் புற்கள் வளர்க்கத் திட்டம்

மன்னார் வளைகுடாப் பகுதியில் கடல் பசுக்களைப் பாதுகாக்கும் வகையில் 3 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் கயிற்றில் கடல் புற்கள் வளர்க்கும் திட்டம் அடுத்த மாதம் முதல் செயற்படுத்தப்பட உள்ளதாக உயிரின காப்பக அதிகாரிகள் தெரிவித்தனர். மன்னார் வளைகுடா பகுதியில் நாகை முதல் தூத்துக்குடி வரையில் 21 தீவுகள் உள்ளன. கடந்த 2015 ஆண்டுக்கு முன்பு நடந்த ஆய்வின்படி இங்கு சுமார் 254 சதுர கிலோ மீற்றரில் கடல் புற்கள் வளர்ந்திருந்தன. இப்பகுதியில் 49 முதல் 153 வரையிலான கடற்பசுக்கள் இருந்ததாக கண்டறியப்பட்டன.

கடல் பசுக்கள் உண்ணவும், அதைச் சார்ந்த சங்கு, கடல் தாமரை போன்றவை வாழவும் கடல் புற்கள் அவசியம். இந்நிலையில் இரட்டை மடி உள்ளிட்ட தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீனவர்கள் மீன்பிடிப்பில் ஈடுபட்டதால், கடல் புற்களின் பரப்பளவு குறையத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து, டேராடூன் கடல் பசுக்கள் மத்திய பாதுகாப்பு நிறுவனம் சார்பில், தொண்டியை மையமாக வைத்து கடல் பசுக்களை பாதுகாப்பது குறித்து, கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

